பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir


வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்
சன்சிகா நகைமாடம்
இல.114, பஸார் வீதி, வவுனியா.
தொலைபேசி: 024 222 4028

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆவணி 23, வெள்ளிக்கிழமை 08.09.2017 | கதிர் 306

## * இணைந்த தாயகத்தில் * சமஷ்ட்டி அடிப்படையில்
# அதி கூடிய அதிகாரப் பகிர்வு

## இடைக்கால அறிக்கையில் கூட்டமைப்பின் நிலைப்பாடு

கொழும்பு, செப்ரெம்பர் 08

வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் சமஷ்டி அடிப்படையில் அதிகூடிய அதிகாரப் பரவலாக்கலுடன் கூடிய ஒரு தீர்வு அவசியம்.

- இவ்வாறு அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கையில், அதனுடன் சேர்த்து இணக்கப்பாடு வெளியிடுவதற்காகத் தான் வழங்கிய அறிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையில் வழிகாட்டல் குழுவின் கூட்டமைப்புப் பிரதிநிதிகளான அதன் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர்.

பக்கம் 18 »

### சு.க. - ஐ.தே.க. இணங்கி வருமானால்
## இடைக்கால அறிக்கையின் பரிந்துரைகளை பரிசீலிக்க தமிழ்க் கூட்டமைப்பு தயார்!

கொழும்பு, செப். 08

"வழிகாட்டல் குழுவின் இடைக் கால அறிக்கையில் பிரதானமாகக் கூறப்பட்டுள்ள பரிந்துரைகள், யோசனைகளின் அடிப்படையில் தீர்வை முன்னெடுப்பதற்குப் பிரதான இரு கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுந்திரக் கட்சியும் இணங்கி வருமானால் அவர்களோடு சேர்ந்து பொது இணக்கப்பாடு ஒன்றுக்கு வருவதற்காக அந்தப் பரிந்துரைகள் குறித்துப் பரிசீலிப்பதற்குத்

பக்கம் 18 »

## வடக்கு மாகாண சபையில் 20 ஆவது திருத்தம்:



### முடிவு இல்லை என்பதே முடிவு என்கிறார் அவைத் தலைவர்

யாழ்ப்பாணம்,செப்.08

அரசினால் முன்வைக்கப்பட்டிருக்கும் அரசமைப்புக்கான இருபதாவது திருத்தத்தை ஆதரிப்பதும் இல்லை; நிராகரிப்ப தும் இல்லை என்ற முடிவே நேற்றைய வடக்கு மாகாண சபையில் எடுக்கப்பட்டிருப்பதாக அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இருபதாவது திருத்தம் தொடர்பில் வடக்கு மாகாண சபை முடிவு எதனையும் எடுக்கவில்லை

பக்கம் 18 »

### நிராகரித்து உறுதியான முடிவு என்கிறார் முதலமைச்சர்



(எஸ்.நிதர்ஷன்)

அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டிருக்கும் அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை வடக்கு மாகாண சபை நிராகரித்து நேற்றுத் தீர்மானம் எடுத்திருப்பதாகத் தெரிவித்திருக்கும் வடக்கு முதலமைச்சர் சி.வீ.விக்கினேஸ்வரன், எனினும் 20ஆவது திருத்தச் சட்டத்தில் புதிய திருத்தங்கள் கொண்டு வரப்பட்டால் அதனை அந்த நேரத்தில்

பக்கம் 18 »

## கிருஷாந்திக்கு நேர்ந்த அவலம் மீள நடவாதிருக்கவே சுயாட்சி!

### அரசுடன் மோதும் காரணத்தை விளக்குகின்றார் விக்கி



யாழ்ப்பாணம், செப்.08

"மாணவி கிருஷாந்தி குமாரசுவாமிக்கு நேர்ந்தமை போன்ற அவலங்கள் இந்த நாட்டில் இனி மேலும் நடவாதிருக்க வேண்டும் என்ற காரணத்தினாலேயே சமஷ்டி முறையிலான சுயாட்சி அதிகாரங்களை வேண்டி நாம் அரசுடன் மோதிக் கொண்டிருக்கின்றோம்."

- இவ்வாறு விளக்கமளித்திருக்கின்றார் வடக்கு மாகாண முதல்வர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

நேற்றுக் காலை செம்மணியில் மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி மற

பக்கம் 18 »




### பொலிஸார் முன் ஆஜரானார் அலோஸியஸ்

கொழும்பு, செப். 08

பிணை முறி ஊழல் தொடர்பான விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்த அர்ஜுன் அலோஸியஸ், இதற்கான ஜனாதிபதி ஆணைக் குழுவின் பணிமனையில் அமைந்

பக்கம் 18 »

### மஹிந்தவின் செயலராகவிருந்த
## லலித் வீரதுங்கவுக்கு 3 ஆண்டுகள் சிறை
### ரூ.5 கோடி நஷ்ட ஈடு செலுத்தவும் பணிப்பு



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயலர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்

பக்கம் 18 »

## பளையில் பாரிய குண்டு கண்டுபிடிப்பு மக்களை வெளியேற்றி வெடிக்க வைப்பு

பளைப்பகுதியில் உள்ள வேம்பொடுகேணி கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட இந்திராபுரம் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் கிபிர் விமானத்திலிருந்து வீசப்பட்டதாகக் கருதப்படும் பாரிய குண்டு

பக்கம் 18 »

# வவுனியாவில் வரட்சி நிவாரணம் பெறுவதில் மக்கள் பெரும் சிரமம்!

வவுனியா, செப். 08

அதிகாரிகளின் அசமந்தச் செயற்பாட்டால்வவுனியாவில் வரட்சி நிவாரணம் வழங்குவதில் தாமதங்கள் ஏற்படுகின்றன எனவும் பொருள்களை சீராக வழங்குவதில்லை என்றும்பொதுமக்கள்தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை 6 மணி முதல் நெளுக்குளம் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தில் வரட்சி உலர் உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்கள் காத்திருந்துள்ளனர்.

சுமார் 5 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த பொது மக்களே இவ்வாறு தமக்கு கிராம சேவையாளரூடாக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கான உலர் உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கு நீண்ட நேரம் காத்திருந்துள்ளனர்.


எனினும், பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் முகாமையாளர் அங்கு வந்தார். நீண்டநேரமாகக் காத்திருந்த பொதுமக்களுக்குத் தேவையானளவு உணவுப் பொருள்கள் கையிருப்பில்லை.





பொருள்கள் வந்து சேரவில்லை எனவே இன்று உலர் உணவுப் பொருள்கள் விநியோகம் மேற்கொள்ளமுடியாது நாளை(இன்று) என்று தெரிவித்துவிட்டு வாசலில் அந்த வாசகத்தைக் காட்சிப்படுத்தி விட்டு பலநோக்குச் சங்கத்தை பூட்டிவிட்டுச் சென்றுள்ளார்.

இதனால் அங்கு கூடியிருந்த மக்களுக்கு பெரும் ஏமாற்றமே ஏற்பட்டுள்ளது.

பல வேலைகளையும் விட்டு விட்டு வேறு வேலைகளுக்கும் செல்லாமல் இப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு நீண்டநேரமாக காத்திருந்த இம்மக்கள் உலர் உணவுப் பொருள்களின்றி திரும்பிச் சென்றுள்ளனர்.






இதேவேளை, தமக்கு வழங்கப்படும் உலர் உணவுப் பொருள்களைத் தமது பகுதிகளிலுள்ள பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தினூடாக வழங்குமாறும் பல நீண்ட தூரங்களிலிருந்து பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கு வரவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் இதனைத் தாமதப்படுத்தி வழங்கிவருவதாகவும் சீரான முறையில் வழங்கப்படவில்லை என்றும் பொருள்களின் விலைகளில் குறிப்பாக சதோசா நிறுவனத்தில் ஒரு விலையும் பலநோக்குக்கூட்டறவுச்சங்கத்தில் ஒரு விலையும் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது என்றும் பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(க-100)

## பத்து வருடங்களுக்குப் பின்னர் நானாட்டானில் காத்தவராயன்!

மன்னார், செப். 08

'மாலையை மணமுடிக்க வரம்பெற்ற மான் ஈன்ற மைந்தன் காத்தவராயன்' வரலாற்று சிந்துநடைகூத்து மன்னார் நானாட்டான் பகுதியில் பத்து ஆண்டுகளுக்கு பின்பு அரங்கேறவுள்ளது.

இலந்தைக்குளத்தைச் சேர்ந்த இ.கந்தசாமியின் நெறிப்படுத்துகையில் நானாட்டான் ஸ்ரீ செல்வமுத்துமாரியம்மன் கலாமன்றம் மாலையை மணமுடிக்க வரம்பெற் மான் ஈன்ற மைந்தன் காத்தவராயன் வரலாற்று சிந்துநடைகூத்தை மேடையேற்றுகிறது.

நாளை மற்றும் நாளை மறுதினம் ஆகிய இரு தினங்கள் மாலை 6.30 மணிக்கு நானாட்டான் ஸ்ரீ செல்வமுத்துமாரியம்மன் ஆலய முன்றிலில் மேடையேற்றப்பட இருக்கும் இந்தக் கூத்து இந்தப் பகுதியில் பத்து வருடங்களுக்கு பின்பு மேடையேற இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக அகில இலங்கை சைவ மகாசபை பொதுச் செயலாளர் வைத்தியகலாநிதி பரா.நந்தகுமார், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா ஆகமகிரியா பாவனர் சிவாச் சாரிய திலகம் வேதத்தமிழ் மறைச்சுடர் சிவ ஸ்ரீ நாராயண சண்முகநாதக் குருக்கள், நானாட்டான் பிரதேச செயலாளர் மா.சிறிஸ்கந்தகுமார், நானாட்டான் பிரதேச சபை செயலாளர் ச.லோகேஸ்வரன், முருங்கன் நீர்பாசன திணைக்கள பொறியியலாளர் பி.யதீஸ், மன்னார் மாவட்ட இந்துமகாசபை தலைவர் செ.சி.இராமகிருஷ்ணன், மன்னார் மாவட்டம் இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் வைத்தியர் மு.கதிர்காமநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வை முன்னிட்டு மன்னார் மாவட்டத்தில் பல பாகங்களிலிருந்தும் விசேட போக்குவரத்துக்களும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

(க-112)











## கிருஷாந்தியின் 21 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிப்பு!

யாழ்ப்பாணம் செம்மணியில் வைத்து ஸ்ரீலங்கா இராணுவத்தால் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட கிருஷாந்தியின் 21 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் கிருஷாந்தி குமாரசுவாமியை நினைவு கூரும் நிகழ்வுகளும் செம்மணியில் அனுஷ்டிக்கப் பட்டது.

கிருஷாந்தியுடன் சேர்த்து படுகொலை செய்யப்பட்ட ஏனையவர்களும் இதன்போது நினைவு கூரப்பட்டு அவர்களுக்கும் அஞ்சலி செலுத்தப் பட்டது.

இதன்போது வறுமைக்கோட்டிற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் 21 பேருக்கு துவிச்சக்கர வண்டிகளும் 63 மாணவர்களுக்கு புத்தகப் பைகளும் வழங்கி வைக்கப் பட்டன.

1996 ஆம் ஆண்டு செம்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எழுதி விட்டு, வீடு திரும்பிய கிருஷாந்தி குமாரசுவாமி கைதடி காவலரணில் வைத்து இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இதனையடுத்து ஒன்பது இராணுவத்தினரும் இரண்டு பொலிஸாரும் அடங்கலாக பதினொரு பேர் கிருஷாந்தியை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தி கொலை செய்திருந்தனர்.

கிருஷாந்தி கைதுசெய்யப்பட்டமை குறித்து விசாரிப்பதற்காகச் சென்ற அவரது தாயார் இராசம்மா, சகோதரர் பிரணவன் மற்றும் அயல்வீட்டுக் காரரான சிதம்பரம் கிருபா மூர்த்தி ஆகியோரையும் இராணுத்தினர் கொலை செய்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த ஐந்து இராணுவத்தினருக்கும் பொலிஸார் ஒருவருக்கும் 1998 ஆம் ஆண்டு மரண தண்டனையும் மேலும் மூவருக்கு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டிருந்தது.

### 20ஆவது திருத்தம் மீதான விவாதம்:

# கிழக்கு மாகாணசபை நேற்று நடத்தவில்லை!

## அது திங்கட்கிழமைக்கு ஒத்திவைப்பு

திருகோணமலை, செப்.08

அரசு முன்வைத்துள்ள இருபதாவது அரசமைப்புத் திருத்தம் குறித்து கிழக்கு மாகாண சபை நேற்றுக் கூடி ஆராயும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அதனை திங்கட்கிழமை – 11ஆம் திகதி – வரைதள்ளிப்போடுவதற்குநேற்று சபையின் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என அறியவந்தது.

மேற்படி இருபதாவது திருத்தத்தில் புதிய மாற்றங்களை – சீரமைப்புகளை – அரசுசெய்துள்ளது என்று கூறப்படுகின்றது –

அது பற்றி உயர் நீதிமன்றுக்கும் அறிவிக்கப்பட்டு விட்டது எனவும் கூறப்பட்டது. –

ஆகவே அந்த மாற்றங்களின் விவரத்தை அறியாமல் சபை (கிழக்குமாகாணசபை) ஒருமுடிவை எடுக்க முடியாது – எடுக்கக்கூடாது – என்று தீர்மானிக்கப்பட்டது.

நேற்று சபைக் கூட்டத்துக்கு முன்னர் அவைத் தலைவரை கிழக்கு மாகாண சபையின் கட்சிகளின்தலைவர்கள் சந்தித்து அன்றைய நிகழ்ச்சி ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்துக் கலந்துரையாடினர்.

அப்போதே மேற்படி விவகாரத்தை எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை சபையில் எடுப்பது எனவும், அதுவரை விடயத்தை ஒத்திப் போடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (உ)

# மாகாண அமைச்சர்களை குறை கூறினர் உறுப்பினர்கள்

வடக்கு மாகாண புதிய அமைச்சர்களும் தன்னிச்சையாகவே செயற்படுகின்றனர் எனச் சபையின் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்றைய சபை அமர்வில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

இதன் போது சபையின் அமைச்சர்கள் தாம் முன்னெடுக்கின்ற செயற்பாடுகள் தொடர்பில் உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்துவதில்லை என்ற குற்றச்சாட்டை அவர்கள் முன்வைத்தனர்.

அதேபோன்று அமைச்சர்களது ஏற்பாட்டில் நடைபெறுகின்ற நிகழ்வுகளுக்கு உறுப்பினர்கள் அழைக்கப்படுவதில்லை என்றும் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டினர்.

குறிப்பாக வடமராட்சியில் ஓர் அமைச்சரின் ஏற்பாட்டில் நடைபெற இருக்கும் நிகழ்விற்கு அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த உறுப்பினர்களே அழைக்கப்படவில்லை என்றும் இதே போன்று தான் பல நிகழ்வுகளும் நடைபெறுகின்றன எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை தற்போது புதிய அமைச்சர்களாகப் பதவியேற்றுள்ளவர்கள் முன்னர் தாங்கள் உறுப்பினர்களாக இருந்தபோது இதேபோன்ற குற்றச்சாட்டுக்களைச் சபையில் முன்வைத்திருந்தமையை ஞாபகப்படுத்தி பழையவற்றை பதவிகள் வந்தவுடன் மறக்க கூடாதென்றும் கேட்டுக் கொண்டனர்.

இதனையடுத்து இனிமேலும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் அமைச்சர்கள் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் கேட்டுக்கொண்டார்.

# முன்னாள் கடற்படை அதிகாரியை கைது செய்யுமாறு பிடி ஆணை!

முன்னாள் கடற்படை அதிகாரியான லெப்டினன்ட் கொமாண்டர் பிரசாத் ஹெட்டியாராச்சியைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு வெல்லம்பிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து போது படுகொலை செய்யப்பட்ட நடராஜா ரவிராஜ் எம்.பியின் வழக்கில் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டு மனுவின் இரண்டாவது பிரதிவாதியே இவராவார்.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் லலித் ஜயசூரிய முன்னிலையில் நேற்று முன்தினம்எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்தவழக்கின் அடுத்த தவணை, 2018ஆம் ஆண்டு ஜனவரி 16ஆம் திகதி இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது.

2006.11.10 அன்று கொழும்பில் வைத்து ரவிராஜ் எம்.பியும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தரும் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட 2ஆவது பிரதிவாதியானலெப்டினன்ட்கொமாண்டர் பிரசாத் ஹெட்டியாராய்ச்சி, 3ஆவது பிரதிவாதியான காமினி செனவிரத்ன, 4ஆவது பிரதிவாதியான பிரதீப் சாமிந்த ஆகிய மூவரும் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி முன்னிரவில், எழுவர் அடங்கிய சிறப்பு ஜூரிகளின் தீர்ப்புக்கு அமைய கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டனர்.

ஜூரிகளின் இந்தத் தீர்ப்பை இரத்துச் செய்யுமாறு, ரவிராஜின் மனைவி சசிகலா ரவிராஜ், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார்.

கடந்த அமர்வில், பிரதிவாதியான பிரசாத் ஹெட்டியாராச்சி மன்றுக்கு ஆஜராவதில்லை என்றும் அவருக்கு பிடி விறாந்து பிறப்பிக்குமாறும் கோரப்பட்டதற்கமைய, நீதியரசர்கள் குழாம், பிரசாத் ஹெட்டியாராச்சியைக் கைதுசெய்து, மன்றில் ஆஜர்படுத்துமாறு பிடிவிறாந்து பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழேயே சுமத்தப்பட்டுள்ளன. அவ்வாறானதொரு வழக்கை ஜூரிகளின் முன்பாக விசாரணைக்கு எடுத்துக்கொள்வது குறைபாடுகளைக் கொண்டதாகும். இந்த வழக்கை ஜூரிகளின்றி விசாரணைக்கு உட்படுத்துமாறு, அந்த மேன்முறையீட்டு மனுவில் கோரப்பட்டுள்ளது.

தமது தரப்பு சட்டத்தரணிகள், ஜூரிகள் சபை தொடர்பில் மேல் நீதிமன்றத்தில் எதிர்ப்பு புகளைத் தெரிவித்திருந்தனர். எனினும், தினந்தோறும்நடத்தப்பட்டவழக்கு விசாரணையின்பின்னர், டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி நள்ளிரவு, ஜூரி சபையால் பிரதிவாதிகள் அனைவரும் குற்றவாளிகள் அல்லர் என தீர்ப்பளித்த தன் பின்னர், மேல் நீதிமன்ற நீதிபதி அவ்வனைவரையும் விடுதலை செய்துள்ளார் என்றும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

சசிகலா ரவிராஜ் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணியும் எம்.பியுமான எம்.ஏ.சுமந்திரனும் 3,4ஆம் பிரதிவாதிகள் சார்பில், ஜனாதிபதி சட்டத்தரணி அநுஜ பிரேமரத்னவும் ஆஜராகியிருந்தனர்.

## ஞாயிறன்று சவாரிப் போட்டி

வட்டுக்கோட்டை – கொத்துத்துறை சவாரித்திடலில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.30 மணி தொடக்கம் தங்கப்பதக்கத்துக்கான 4 ஆவது மாபெரும் சவாரிப்பந்தயம் இடம்பெறவுள்ளது.

'ஏ', 'பி', 'சி', 'டி' என்று நான்கு பிரிவுகளாகப் போட்டிகள் இடம்பெறும். ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பெறும் வெற்றியாளருக்கு முதற்பரிசாக தங்கப் பதக்கமும், ஏனைய வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

'இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்' வருடாந்தோறும் நடத்தும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிகளின் வரிசையில் இது இடம்பெறவுள்ளது.

# உறுப்பினர்களின் போக்கு; அவைத் தலைவர் விசனம்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் உள்ளிட்ட உறுப்பினர்கள் சபை ஒழுங்கு முறைகளை உரிய முறையில் பின்பற்ற வேண்டுமென அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 105 ஆவது அமர்வு நேற்று நடைபெற்றது. சபை அறிவிப்புக்களை விடுக்கின்றபோது அவைத் தலைவர் சிவஞானம் சபையின் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களின் சபைச் செயற்பாடுகள் குறித்து கடுமையான அதிருப்தியை வெளியிட்டார்.

அதே நேரம் மாகாண சபையின் முதலமைச்சர் சபையின் மரபுகளுக்கமையவும் சபைக் கட்டுப்பாடுகளை மதித்தும் அவற்றைப் பின்பற்றி சரியான முறையிலும் செயற்பட்டு வருகின்றார் என்று குறிப்பிட்ட அவைத் தலைவர் சிவஞானம், ஆனால் அவர் சார்ந்த அமைச்சர்கள் அவ்வாறு நடப்பதில்லை என்றார்.

அதே போன்று தான் உறுப்பினர்களும் சபைக் கட்டுப்பாடுகளுக்கேற்ப நடப்பதில்லை. ஆகவே முதலமைச்சரைப் போன்றுசபையின்அமைச்சர்கள் மற்றும்உறுப்பினர்கள்செயற்பட வேண்டும், அத்தோடு மாகாண சபையை அனைவரும் மதித்துச் செயற்படவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை மாகாண சபையின் கடந்த அமர்வின்போது மதிய உணவு இடைவேளைக்குப் பின்னர்அதிகஎண்ணிக்கையான உறுப்பினர்கள் சபைக்கு மீளவும் வராமல் சென்றிருந்தமையால் சபையில் கோரம் இல்லாமல் சபைஅமர்வைதொடர்ந்துநடத்த முடியாது முதற்தடவையாக சபை ஒத்திவைக் கப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையிலேயே நேற்றைய அமர்வில் அவைத் தலைவர் உறுப்பினர்களுக்கு மேற்படி அறிவுரையை வழங்கியுள்ளமையுடன் சபை ஒழுங்கு விதிகளுக்கமையவும் சபைக் கட்டுப்பாடுகளுக்கமையவும் செயற்பட வேண்டுமென அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களிடம் வேண்டுகோளும் விடுத்தார்.

# ரணில் – மஹிந்த தரப்புகள் நேற்று ஒரு மணி நேரம் பேச்சு

கொழும்பு, செப்.09

முன்னாள்ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடையே விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இச்சந்திப்பு சுமார் ஒரு மணித்தியாலம் வரை இடம்பெற்றுள்ளது.

இக்கலந்துரையாடலில் கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களான தினேஷ் குணவர்தன, டலஸ் அழகப்பெரும உட்பட பலர் கலந்துகொண்டனர்

இருப்பினும், அங்கு பேசப்பட்ட விடயங்கள் என்னவென்பது ஊடகங்களுக்கு வெளியிடப்படவில்லை.

# வெளிமாவட்டங்களில் இருந்து வரும் அங்காடி வர்த்தகர்களுக்குத் தடை!

## நேற்று வடக்கு மாகாண சபையில் தீர்மானம்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் வெளி மாவட்டத்தைச்சேர்ந்தவர்களின் அங்காடி வியாபாரத்தைத் தடை செய்யுமாறு வடக்கு மாகாண சபையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் 105ஆவது அமர்வு நேற்று நடைபெற்ற போது மேற்படி தீர்மானம் சபையின் உறுப்பினரும், யாழ். வணிகர்கழகத்தலைவருமான இ.ஜெயசேகரமால் முன்மொழியப்பட்டு சபையில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் மாநகரசபை, நகரசபை, பிரதேச சபைகளின் ஆளுகைக் குட்பட்ட பிரதேசங்களில் நிரந்தர வர்த்தகர்களுக்கு இடையூறாக, அவர்களுடையகடைகளுக்குஅருகாமையிலும், சந்திகளிலும், வீதிகளிலும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த அங்காடிவர்த்தகர்கள்தமது வர்த்தக நடவடிக்கைகளை நடத்துகின்றார்கள்.

ஆனால்மத்திய அரசு, மாகாண அரசு ஆகியவற்றுக்குரிய சகல வரிகளையும் செலுத்துவது டன் ஏனையபலகட்டணங்களையும் செலுத்தி முற்றுமுழுதாக, சட்ட ரீதியாக வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றநிரந்தரவர்த்தகர்களின் வாழ்வாதாரத்தை நடைபாதை வர்த்தகம் பெரும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.

கடந்த காலப் போரால் பாதிக்கப்பட்ட எமது வர்த்தகர்கள் எந்த விதநஷ்டஈட்டையோ, இலகு கடன் திட்டங்களையோ பெற முடியாத நிலையில், எதிர்நீச்சல் போட்டுப் பெரும் சிரமத்தின் மத்தியில் தமது வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

அவ்வாறிருக்கையில், எந்த விதமான சட்டரீதியான கட்டுப்பாட்டையும் கொண்டிருக்காத வெளிமாவட்ட அங்காடி வர்த்தகர்களும், இந்திய வர்த்தகர்களும் இங்கு சுதந்திரமாகத் தங்களது வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள்.

எனவே, எமது நிரந்தர வர்த்தகர்களையும், அமது பொருளாதாரத்தையும் பாதுகாக்க வெளிமாவட்ட அங்காடிவர்த்தகர்களையும், இந்திய வர்த்தகர் களையும் வட மாகாணத்தில் முற்று முழுதாகத் தடை செய்ய வேண்டும். – என அவர் தனது தீர்மானத்தில் முன்மொழிந்தார்.

எனினும், இந்தத் தீர்மானம் இனப் பாகுபாடு ரீதியானது என எதிர்க்கட்சி உறுப்பினர் செனவிரத்னசாடினார். எனினும் அதனை மறுத்து ஜெயசேகரம், தென்னிலங்கை வர்த்தகர்கள் இங்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். எனினும், அங்காடிவியாபாரிகள் இந்த நிரந்தர வர்த்தகர்களைப் பாதிக்கின்றனர். அதனால் தான் இவற்றைத்தடைசெய்யுமாறுகோருகின்றேன் என்றார். இதன் பின்னர் பிரேரணைசபையில்எதிர்ப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பகிரங்கமானது கூட்டமைப்பின் நிலைப்பாடு

"எமது தமிழ் மக்களுக்கு முன்னாலும் வெளிநாட்டு, இராஜதந்திரிகள், மேற்குலகத் தலைவர்கள், அந் நாட்டுத் தலைவர்கள் முன்னால் எல்லாம் தமிழ் மக்களின் உரிமைகள் குறித்தும் சமஷ்டித் தீர்வு, இறைமை, இணைந்த தாயகம் பற்றியும் அடித்துப் பேசும் கூட்டமைப்புத் தலைமை, அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல் குழுவில் அமுக்கி வாசிக்கின்றது" - என்ற குற்றச்சாட்டு பரவலாகக் கூறப்படுவது உண்டு. குறிப்பாகத் தமிழ்க் கூட்டமைப்புக்குள்ளேயே அதன் தலைமைத்துவத்துக்கு எதிராகக் கருத்து வெளியிட்டு வரும் சில தலைவர்கள் இப்படிப் பகிரங்கமாகக் குற்றம் சுமத்துவது உண்டு.

அண்மையில் யாழ். நகரில் தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நடந்த ஒரு கூட்டத்திலேயே ஒரு கட்சித் தலைவர் இப்படி அப்பட்டமாகக் குற்றம் சுமத்தியுமிருந்தார். ஆனால், அங்கு பேசிய புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் அதனை மறுத்துரைத்து, கூட்டமைப்புத் தலைமை, வழிகாட்டல் குழுக் கூட்டங்களில் தமிழர் தரப்பின் நியாயமான கோரிக்கைகளை - அபிலாஷைகளை - எதிர்பார்ப்புக்களை - வேணவாக்களை - விடாது வலியுறுத்தி வந்திருக்கின்றது என்பதை உறுதிப்படுத்திக் குறிப்பிட்டார்.

சித்தார்த்தன் கூறியவை உண்மையே என்பது இப்போது தெளிவாகியிருக்கின்றது.

வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கைக்கு இணைப்பாகச் சேர்ப்பதற்கு, தமிழ்க் கூட்டமைப்பின் நிலைப்பாடு பற்றிய விளக்கத்தை கூட்டமைப்புத் தலைமை வழங்கியிருக்கின்றது எனத் தெரியவருகின்றது.

தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல் குழுவில் இடம்பெற்றிருக்கும் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. ஆகியோர் இது தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை உறுதிப்படுத்தும் விளக்கத்தை ஒப்பமிட்டு வழங்கியிருக்கின்றார்கள்.

இடைக்கால அறிக்கையின் ஓர் அங்கமாக இடம்பெறப் போகும் அந்த விளக்கம் - பின் இணைப்பு - சம்பந்தப்பட்ட இடைக்கால அறிக்கை பகிரங்கமாவதற்கு முன்னர் வெளியிடப்பட முடியாதது என்பதால், அது இன்னும் வெளிப்படையாக வெளிவரவில்லை. ஆனால் அதன் சாரம் தெரியவந்திருக்கின்றது.

'வடக்கு - கிழக்கு இணைந்த தமிழ்த் தாயகத்தில், சமஷ்டி அடிப்படையில், அதி கூடிய அதிகாரப் பகிர்வு கொண்ட ஒரு தீர்வையே நாங்கள் எதிர்பார்க்கின்றோம்" - என்ற சாரப்பட மிக விளக்கமாகவும், விவரமாகவும் இந்த இணைப்பு அறிக்கை வரையப்பட்டிருக்கின்றது என அறிய வந்தது.

'இறைமை, 'உள்ளக சுய நிர்ணயம்', 'வெளியக சுயநிர்ணயம்' என்பவை பற்றியெல்லாம் இந்த நிலைப்பாட்டு அறிக்கை வெளிப்படையாகக் கருத்து வெளியிடவில்லை. அல்லது அவை பற்றி ஏதும் பிரஸ்தாபிக்கவில்லை.

இப்படியான சொல் ஜாலங்கள் எமக்குத் தேவையற்றவை. விடயமே முக்கியம். இந்தச் சொல் ஜாலங்கள் குறிக்கும் விவகாரங்கள் தீர்வுக்குள் அடங்கியிருந்தால் போதும் என்பதே மக்களின் நிலைப்பாடு.

இந்தக் கட்டத்திலாவது - இப்போதாவது - வடக்குக் கிழக்கு இணைப்பு மற்றும் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு ஆகிய நிலைப்பாடுகளில் கூட்டமைப்பின் தலைமை உறுதியாக நிற்கின்றது என்பது தெளிவுபடுத்தப்பட்டிருப்பது நல்ல அம்சமே.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அடிக்கடி சுட்டிக்காட்டுகின்றமை போல, தீர்வுக்கான முயற்சிக்கு இது ஓர் அருமையான சந்தர்ப்பம்.

காலாதிகாலமாக பெரும்பான்மையினத்தவர்களின் இரு பெரும் கட்சிகளும், எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழர்களின் இனப் பிரச்சினையைத் தங்களுக்குரிய பிரதான அரசியல் சர்ச்சைக்கான மையப் பொருளாக வைத்துக் கொண்டு நடத்தி வந்த அரசியல் சித்து விளையாட்டினால்தான், இப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவது அசாத்தியமானதாக நீடித்தது.

இப்போது இரண்டு பிரதான கட்சிகளுக்கும் ஓர் அரசில் ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டிய கட்டாயத்தை - உள்நாட்டு அரசியலில் அசாதாரண அரசியல் சூழலை - விநோதமான கூட்டிணைவை - இன்றைய வரலாற்றுத் தேவை தந்து நிற்கின்றது.

இந்தப் புதுமையான சந்தர்ப்பத்தை, சாமர்த்தியமாகப் பற்றி நின்று சாதிப்பதே முக்கியமானது. அதை நம் தலைவர்கள் முழு அளவில் சாதிப்பார்கள் என்று எதிர்பார்ப்போம்.

இதில் அவர்கள் தோற்பார்களாயின், ஏற்கனவே வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூறியமை போல, "தென்னிலங்கைத் தலைவர்களை வீழ்த்தும் அரசியல் சாமர்த்தியம் நமக்குப் போதாது" என்பது மீண்டும் நிரூபணமாகும். அவ்வளவே.

# வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் விமான நிலையத்தில் வைத்துக் கைது!

கொழும்பு, செப். 08

வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரிய வருபவை வருமாறு:-

இளைஞர் ஒருவர் கனடா செல்வதற்காக முகவர் ஒருவருடன் தொடர்பை ஏற்படுத்தியுள்ளார்.

அந்த முகவர் வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் ரி.கே. இராஜலிங்கத்துக்கு அறிமுகமானவர். அதனால் அந்த இளைஞர் வெளிநாடு செல்வதற்கான பணத்தை வர்த்தக சங்கத் தலைவரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யுமாறு கோரியுள்ளார்.

அந்த இளைஞனும் அவ்வாறே வைப்புச் செய்த நிலையில், முகவரால் வெளி நாட்டுக்கு அனுப்பப்படாது ஏமாற்றப்பட்டுள்ளார்.

இதனையடுத்து அந்தப் பணத்தை மீளப் பெறுவதற்கு இளைஞர் முயற்சிகளை மேற்கொண்ட போதும் அது பயனளிக்காமையால், கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாடு தொடர்பில் வவுனியா வர்த்தக சங்கத் தலைவரை நீதிமன்றில் ஆஜராகுமாறு அவருக்கு கொழும்பு நீதிமன்றத்தால் அழைப்புக் கட்டளை அனுப்பப்பட்டிருந்தது.

இந்த நிலையில், அவர் ஆஜராகாமையால், இந்தியாவில் இருந்து இலங்கை வந்த போது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (100)

# வவுனியா பகுதியில் இடம்பெற்ற விபத்தில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் படுகாயம்!

வவுனியா, செப். 08

வவுனியா, பத்தினியார் மகிழங்குளம்பகுதியில்இடம்பெற்ற விபத்தில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருபவை வருமாறு:-

வவுனியா நகரில் இருந்து தனது வீடு நோக்கி தாண்டிக்குளம் - புதுக்குளம் வீதியில மோட்டர் சைக்கிள் ஒன்றில் பய ணித்த வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் க.பார்த்தீபன் பத்தினியார்மகிழங்குளம் பகுதியில் வீதியில் நின்ற மாடு ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானார்.

இந்த விபத்தில் அவர் படுகாயமடைந்த நிலையில் அவ்வீதியால் சென்றவர்களால் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துக் குறித்து ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (100)

# வவுனியாவில் சூட்சுமமான முறையில் 15 ஆடுகள் திருட்டு!

வவுனியா, செப். 08

வவுனியாவில் சூட்சுமமான முறையில் 15 ஆடுகள் திருடப்பட்டுள்ளன என வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வவுனியா, ஆச்சிபுரம் பகுதியில் ஆட்டுப் பட்டி ஒன்றை வைத்திருக்கும் ஒருவரிடம் ஹயஸ் ரக வாகனத்தில் சென்ற நபர் ஒருவர், தான் பட சூட்டிங் ஒன்று செய்யவுள்ளார் என்றும் அதற்கு 15 ஆடுகள் தேவை என்றும் கூறியுள்ளார்.

இதற்கு ஆட்டு உரிமை யாளரும் சம்மதித்த நிலையில், பிறிதொரு இடத்தில் சூட்டிங் நடப்பதால் ஆடுகளைக் கொண்டு செல்ல வேண்டும் என 15 ஆடுகளை ஹயஸ் ரக வாகனத்தில் ஏற்றியுள்ளமையுடன், ஆடுகளை வழங்கியமைக்காக ஆட்டு உரிமையாளருக்கு 20 ஆயிரம் ரூபா பணத்தை வாடகையாகவும் கொடுத்துள்ளார்.

ஆடுகளை ஏற்றிக் கொண்டு ஆட்டு உரிமையாளரையும் அழைத்துக் கொண்டு வவுனியா நகரை நோக்கி வந்த அந்த நபர், பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலயத்திற்கு அருகில் உள்ள இராணுவ உணவுச் சாலை அருகே வாகனத்தை நிறுத்தி விட்டு, சோடா ஒன்று வாங்கி வாருங்கள் என 200 ரூபா பணத்தைக் கொடுத்து ஆட்டு உரிமையாளரை வாகனத்தில் இருந்து இறக்கியுள்ளார்.

சோடா வாங்கிக் கொண்டு வாகனம் நின்ற இடத்திற்கு ஆட்டு உரிமையாளர் வந்தபோது வாகனம் அவ்விடத்தில் இல்லை. ஆடுகளும் இல்லை.

இதனையடுத்து திட்டமிட்டு திருட்டு இடம் பெற்றதை உணர்ந்த ஆட்டு உரிமையாளர் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொணடு வருகின்றார்கள். (100)

# குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் பெரும் சிரமம்!





முல்லைத்தீவு, செப். 08

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, மந்துவில் பகுதியில் குடிதண்ணீர் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இப்பகுதியில் உள்ள கிணறுகள் மிகவும் ஆழம் கூடிய கிணறுகளாகக் காணப்படுவதுடன், சிலகிணறுகள் நீர்வற்றிக் காணப்படுகின்றன.

அத்துடன், அதிகளவான குடும்பங்கள் கிணறுகள் இன்றியே வாழ்ந்து வருகின்றன.

இந்த நிலையில், இங்குள்ள மக்கள் தமக்கான குடிநீர் உள்ளிட்ட ஏனைய தேவைகளுக்கான நீரைப் பெற்றுக் கொள்வதற்குப் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன் நீண்ட தூரத்திற்குச் சென்று நீரைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

## நாளை

09.09.2017
சனிக்கிழமை

நட்சத்திரம்: ரேவதி பி.ப. 1.36 வரை
திதி: திருதியை மு.ப. 10.24 வரை
சுபநேரம் : 03.04 – 4.34 வரை
இராகுகாலம்: 9.04 – 10.34 வரை

# சரத் பொன்சேகாவின் கருத்து அரசின் நிலைப்பாடு அல்ல!

## நாடாளுமன்றத்தில் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு!



கொழும்பு, செப்.08

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜயசூரிய தொடர்பாக அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா வெளியிட்ட கருத்து அவரது தனிப்பட்ட கருத்தே என்றும் அது அரசின் நிலைப்பாடு அல்ல என்றும் நாடாளுமன்றத்தில் அவை முதல்வரான அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல அறிவித்துள்ளார்.

முன்னைய அரசைப் போன்று, தற்போதைய அரசும் இராணுவத் தளபதிகளை ஒருபோதும் சிறையில் அடைக்காது. இலங்கை ஆயுதப் படையினரை எந்தவொரு வெளிநாட்டு நீதி மன்றமும் தண்டிப்பதற்கு அரசு அனுமதிக்காது என்றும் அவர் கூறியுள்ளார்.

இறுதிக்கட்டப் போர்க் காலத்தில் ஜெனரல் ஜயசூரிய குற்றங்களை இழைத்திருந்தார் என்றும், அதுகுறித்து சாட்சியமளிக்கத் தாம் தயாராக இருக்கிறேன் எனவும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறியிருந்தார்.

இது குறித்து நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம், கூட்டு எதிரணியின் தலைவரான தினேஸ் குணவர்த்தன கேள்வி எழுப்பினார்.

ஜெனரல் ஜயசூரியவுக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பான அரசின் கொள்கை என்ன? நாட்டின் பாதுகாப்பு படையினரை காட்டிக் கொடுத்த அரசாங்க உறுப்பினர்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்படும்? என்று அவர் கேள்விகளை எழுப்பினார்.

அத்துடன், ஜெனரல் ஜெகத் ஜயசூரிய மற்றும் ஏனைய இராணுவ அதிகாரிகள், தூதுவர்கள், வெளிநாடுகளில் உள்ள இராஜதந்திரிகளுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் பதிலளிக்க வேண்டும் என்றும் அவர் கோரினார்.

மேலும், வெளிநாடுகளில் பாதுகாப்புப் படையினரைப் பாதுகாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்றும் தினேஸ் குணவர்த்தன கோரினார்.

இதற்குப் பதிலளித்த, அவை முதல்வரான லக்ஸ்மன் கிரியெல்ல, இந்தக் கேள்விகளுக்கு இரண்டு வாரங்களில் பதிலளிக்கப்படும் என்று கூறினார்.

இதற்குகூட்டுஎதிரணியினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதையடுத்து, இந்த விவகாரம் தொடர்பான இன்றைய கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஆராயப்படும் என்று சபா நாயகர் அறிவித்தார்.

## விடைத்தாள் திருத்தும் பணி நேற்று ஆரம்பம்!

கொழும்பு, செப். 08

நடந்து முடிந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் நேற்று வியாழக்கிழமை முதல் முன் னெடுக்கப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்ட பணிகளுக்காக 27 பாடசாலைகள்பயன் படுத்தப்படவுள்ளன என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அவற்றில் ஐந்து பாடசாலை களை முழுமையாகவும் 22 பாடசாலைகள் பகுதியளவிலும் பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளன என்றும் அத்திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

நாடளாவிய ரீதியில் கடந்த 8 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி வரையில் கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சை நடைபெற்றது.

இந்த நிலையில், இந்தப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் நேற்று வியாழக்கிழமை முதல் எதிர் வரும் 20 ஆம் திகதி வரையில் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்டப் பணிக ளுக்காக 27 பாடசாலைகள் பயன்படுத்தப்படவுள்ள நிலையில் அவற்றில் ஐந்து பாடசாலைகள் முழுமையாகவும் ஏனைய 22 பாடசாலைகள் பகுதியளவிலும் பயன்படுத்தப்படவுள்ளன.

இதன்படி கொழும்பு றோயல் கல்லூரி, கண்டி கிங்ஸ்வூட் வித்தியாலயம், கண்டி விஹார மகா தேவி மகளிர் பாடசாலை, கண்டி சுவர்ணமாலி மகளிர் பாடசாலை, கண்டி சீதா தேவி மகளிர் பாடசாலை ஆகியன முழுமையாக பயன்படுத்தப்படவுள்ளன.

விடைத்தாள் திருத்தும் பணிகளுக்காக முழுமையாக மூடப்படும் ஐந்து பாடசாலைகள் மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி திறக்கப்படவுள்ளதுடன் பகுதியளவில் பயன்படுத்தப்படும் பாடசாலைகள் அனைத்திலும் நேற்று முன்தினம் முதல் மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

## அரசாங்க பணியாளர்களின் அலுவலக நேரத்தில் மாற்றம்!

கொழும்பு, செப். 08

அரசாங்க பணியாளர்களின் அலுவலக நேரங்களில் மாற்றம் செய்யப்படவுள்ளது.

பத்தரமுல்ல பிரதேசத்தில் செயற்படும் அரசாங்க நிறுவனங்களின் அலுவலக நேரங்கள் மாற்றப்படவுள்ளன என பொது நிர்வாகம் மற்றும் நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி முதல் காலை 7.15 மணி முதல் மாலை 3.15 வரை என்ற காலப் பகுதிக்கு நேரம் மாற்றப்படவுள்ளது என அமைச்சு நேற்று முன்தினம் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக பெருநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனபோக்குவரத்து அமைச்சகத்தின் செயலாளர் ஜே. ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

இது ஒருபைலட்திட்டமாகும், இது பெருநகர அமைப் பால் முன்னெடுக்கப்படும் முன்னுரிமைபஸ்பாதைத்திட்டத்துடன் கைகோர்த்து செயற் படுவதாக ரத்னசிறி குறிப் பிட்டுள்ளார்.

இந்த புதிய நேர மாற்றுத் திட்டம் ஊழியர்களின் பணி நேரத்துக்குள் உட்பட்டதாக இருக்கும்.

இது தொடர்பில் அந்தந்த அரச திணைக்களங்களின் தலைவர்கள் முடிவு செய்ய முடியும்.

காலை 9. 15 மணி முதல் பிற்பகல் 3.15 மணி வரை கட்டாய வேலை நேரங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அலுவலகம் செல்லும் ஊழியர்கள் அதிகளவான நேரத்தில் வாகன நெரிசல் காரணமாக வீதிகளில் செலவிட வேண்டியுள்ளது. அவ்வாறான அசௌகரியங்களைக் குறைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கம் எனப் போக்குவரத்து அபிவிருத்தித் திட்டத்தின் பிரதி பணிப்பாளர் பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

## நாட்டின் பல பகுதிகளில் அடைமழை; வளிமண்டல திணைக்களம் தகவல்!



கொழும்பு, செப். 08

மேல் மாகாணத்தில், கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தொடர்ந்து அடைமழை பெய்து வரும் நிலையில், நாட்டின் பல பிரதேசங்களில் இன்றைய தினம் அடைமழை பெய்யும் என எதிர் பார்ப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

களுத்துறை, இரத்தினபுரி மற்றும் காலி மாவட்டங் களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு தெரிவித்துள்ளது.

தொடர்ந்து மழை பெய்வதால், மண்சரிவு, மண்மேடு சரிவு, நிலம் தாழ் இறங்கும் ஆபத் துகள் ஏற்படும் அறிகுறிகள் காணப்படுகின்றன. இதனால் பாதுகாப்பான இடங்களுக்கு உடனடியாக செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மக்களுக்கு அறிவித்துள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் பாலிந்துநுவர, அகலவத்தை, வலல்லாவிட ஆகிய பிரதேசங்களிலும், இரத்தினபுரி மாவட்டத்தின் குருவிட்ட, அயகம, கிரி எல்ல, இரத்தினபுரி பிரதேச செயலாளர் பிரதேசத்திலும் இந்த மண்சரிவு எச்சரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது.

காலி மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் இந்த மண்சரிவு எச்சரிக்கை விடுத்து அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு மற்றும் மலையக பகுதிகளில் அடைமழை பெய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அதிபருக்கு எதிராக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!





மட்டக்களப்பு, செப். 08

மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கருவப்பங்கேணியில் உள்ள பாடசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ள அதிபருக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த வருடம் மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட கருவப்பங்கேணி விபுலானந்தர் கல்லூரியில் ஆசிரியர் ஒருவரால் மாணவி ஒருவர் துஷ்பிரயோகப்படுத்தப்பட்டார் என்ற சம்பவத்துடன் தொடர்புடைய ஆசிரியருக்கு கல்லூரி அதிபர் ஒத்துழைப்பு வழங்கினார் என்ற காரணத்தில் அப்பகுதி மக்களால் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தச் சம்பவம் காரணமாக சம்பவத்துடன் தொடர்புடைய ஆசிரியரும், அதிபரும் வலய கல்விப் பணிப்பாளரால் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டதின் பின் இக்கல்லூரிக்கு புதிய அதிபராக சாந்தகுமார் என்பவர் அதிபராக நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில், இடமாற்றம் செய்யப்பட்ட அதிபர் சபேஷ்வரன் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய மீண்டும் கருவப் பங்கேணி விபுலானந்தர் கல்லூரிக்கு அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தே பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், கிராம அபிவிருத்தி சங்கு உறுப்பினர்கள் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் அமைப்புக்களின் அங்கத்தவர்கள் இணைந்து நேற்று கல்லூரிக்கு முன்பாக கண்டன ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

இதன்போது ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது பாடசாலைக் கல்வி நிர்வாகம் சீராகச் செயல்படுகின்ற நிலையில், மீண்டும் இவ்வாறன அதிபர்கள் கல்லூரிக்கு வருகின்றமையால் கல்லூரியின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றமையோடு, மாணவர்களின் மன நிலையும் பாதிப்புக்குள்ளாகும்.

எனவே, இவ்வாறான அதிபர்கள் இக்கல்லூரிக்கு வருகின்றமையை பெற்றோர்களாகிய நாங்கள் எவ்விதத்திலும் அனுமதிக்கப்போதில்லை என தெரிவித்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டம் கல்லூரி முன்றிலில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுள் மாணவர்கள் பெருவாரியினர் என்பதாலும் சிறிது நேரத்தில் தாமாக கலைந்து சென்றமையாலும் பொலிஸார் எதுவித சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. (க)



## நிந்தவூரில் கோர விபத்து; இளம் பெண் உயிரிழப்பு!

மட்டக்களப்பு, செப். 08

நிந்தவூரில் மோட்டார் சைக்கிள் மீது பாரவூர்தி ஒன்று மோதுண்டதில் பெண்ணொருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

இந்த விபத்தில் அட்டப்பழம் பகுதியை சேர்ந்த இளம் குடும்ப பெண் ஒருவரே பலியாகியுள்ளார். அத்தோடு,கணவன் மற்றும் பிள்ளை உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்திய சலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## சட்டவிரோத மதுபான நிலையம் களுவன் கேணியில் முற்றுகை!

மட்டக்களப்பு, செப். 08

மட்டக்களப்பு - களுவன் கேணி பகுதியில் நீண்ட காலமாக சட்ட விரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வந்த இடம் நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்ட மதுவரித் திணைக்களத்தால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட மதுவரித் திணைக்கள அதிகாரிக்குக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கசிப்பு விற்பனை மற்றும் உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நிலையில், கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இன்று ஏறாவூர் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என மாவட்ட



மதுவரி திணைக்கள பொறுப்பதிகாரி பி.செல்வகுமார் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த வழக்கு எதிர்வரும் 13 ஆம் திகதி ஏறாவூர் நீதவான் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், மாவட்ட மதுவரி திணைக்கள பொறுப்பதிகாரி பி.செல்வகுமார் தெரிவிக்கையில்-

மாவட்ட மதுவரித் திணைக்களத்தால் கடந்த 8 மாத காலப் பகுதியில் களுவன்கேணி, வாழைச்சேனை, ஏறாவூர், வாகரை ஆகிய சுற்றுலா நீதிமன்ற பிரதேசத்திற்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்களில் சட்ட விரோத கசிப்பு விற்பனை, சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் கஞ்சா விற்பனை தொடர்பில் 495 சட்ட விரோத குற்றச் செயல்கள் பதிவு செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன என்று கூறியுள்ளார்.

## வரலாற்றுச் சிறப்புப் பெற்ற சித்தாண்டி முருகன் ஆலயத்தின் தீர்த்தோற்சவம்!







மட்டக்களப்பு, செப். 08

கிழக்கிலங்கையில் புகழ் பெற்ற முருகன் பேராலயங்களுள் வரலாற்றுத் தொன்மை கொண்ட சித்தாண்டி ஸ்ரீ சித்திர வேலாயுதர் பேராலயத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழா நேற்று முன்தினம் காலை நடைபெற்ற தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெற்றுள்ளது.

இந்த ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா கடந்த 22 ஆம் திகதி பிரம்மோற்சவ பிரதம குரு சிவஸ்ரீ கைலாசநாத வாமதேவக் குருக்கள், ஆலய ஸ்தானிக குரு சிவஸ்ரீ உலகநாத புஸ்பராஜ் குருக்கள் ஆகியோரின் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இந்த நிலையிலேயே ஸ்ரீ சித்திர வேலாயுதரின் இறுதி நாள் தீர்த்தோற்சவம் நேற்று முன்தினம் காலை சித்தாண்டி உதயன்மூலையில் அமைந்துள்ள சரவணப் பொய்கையின் பிரணவத் தீர்த்தத்தில் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

இந்த இறுதி நாள் நிகழ்வில் பக்தர்கள் காவடிகள் எடுத்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக் கொண்டனர். பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டும் இருந்தனர்.

# இனியும் அமைதியாக இருக்கமாட்டேன்; எச்சரிக்கின்றார் கோட்டாபய ராஜபக்ஷ!

கொழும்பு, செப். 08

நாடு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் போது நான்தொடர்ந்தும்அமைதியாக இருக்கமாட்டேன்என்று இலங்கையின்முன்னாள்பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

பொரலஸ்கமுவவில் நேற்று முன்தினம் 'எலிய' (வெளிச்சம்) என்ற அமைப்பை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், 'எலிய- ஒளிமயமான அபிலாஷைகள்' என்ற பெயரிலான புதிய அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

பொரலஸ்கமுவவில் உள்ள விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் மாலை இந்த அமைப்பின் தொடக்கவிழா இடம் பெற்றது.



இந்த நிகழ்வில், முன்னாள் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரர்களான சமல் ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ மற்றும் கூட்டு எதிரணியில் உள்ள கட்சிகளின் தலைவர்கள் விமல் வீரவன்ஸ, தினேஷ் குணவர்த்தன மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும், முன்னாள் உச்சநீதிமன்றத் தலைமை நீதியரசர் சரத் என் சில்வா, முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப் ரால், முன்னாள் இராஜதந்திரிகளான தாமரா குணநாயகம், கலாநிதி தயான் ஜெயதிலக, மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் உரையாற்றிய போதே கோட்டாபய ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிரிவினைவாதிகள் தீவிரவாதத்தின் ஊடாக அடைய முடியாததை, புதியஅரசமைப்பு வழங்கும். இதனைத் தோற்கடிக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளின் அனுதாபிகள், புலிகள் ஆதரவு புலம்பெயர் தமிழர்கள், ஒரு பகுதி வெளிநாட்டு சக்திகளை திருப்திப்படுத்தவே இந்த அரசமைப்பு மறுசீரமைப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

போருக்குப் பிந்திய இலங்கையை இனரீதியாகப் பிரிக்கவே, தற்போதைய கூட்டு அரசு வழிதேடுகிறது. பிரிவினைவாத ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்தும் அரசின் இந்த முயற்சியை மக்கள் எதிர்க்க வேண்டும்.

எந்தவொரு சூழ்நிலையிலும் அரசு நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்குஎலிய அமைப்பு அனுமதியாது.

நாட்டின் ஒன்றையாட்சியைப் பாதுகாப்பதற்கு, புதிய அரசமைப்பைக் கொண்டுவரும் முயற்சிகளுக்கு எதிராக மக்கள் வழி நடத்த வேண்டியது முக்கியம்.

அரசமைப்பு என்ற போர்வையில் நாட்டைப் பிளவுபடுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படும் போது, அமைதியாக இருக்க முடியாது.

இறுதிக்கட்டப் போரில் விடுதலைப் புலிகளை பாதுகாக்க முற்பட்ட நாடுகளே இந்த அரசமைப்பு உருவாக் கத்துக்குப் பின்னால் இருக்கின்றன.

புதிய அரசமைப்பை எலிய எதிர்க்கும். தீவிரவாதத்தைத் தோற்கடித்து பெற்றதை பாதுகாக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு இராணுவத்தினர் பெரும் தியாகங்களைச் செய்துள்ளனர். நாட்டின் இறைமை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டைச் சிதைக்கும் எந்த முயற்சிகளுக்கும், எந்த விலை கொடுத்தாவது எதிர்க்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## 20 ஆவது திருத்தச்சட்டம் திருத்தப்படும்!

சட்டமா அதிபர் தெரிவிப்பு



கொழும்பு, செப். 08

இலங்கை அரசால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள, 20 ஆவது திருத்தச்சட்டம் விரைவில், திருத்தங்கள் செய்யப்படும் என்று சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

20 ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 13 மனுக்களின் மீதான விசாரணை நேற்று முன்தினம் தலைமை நீதியரசர் பிரியசாத் டெப் தலைமையிலான மூன்று நீதியரசர்களைக் கொண்ட அமர்வின் முன்பாக நடைபெற்றது.

இதன் போது, சட்டமா அதிபர் முன்னிலையாகி, விளக்கமளித்தார்.

இதன் போது அவர், மாகாணசபைகளின் அதிகாரங்கள் நாடாளுமன்றத்துக்கு வழங்கப்படா. நிர்வாக அதிகாரம் ஆளுநரிடமே இருக்கும். இந்த சட்ட வரைவு மீதான குழு நிலை விவாதத்தில் திருத்தங்கள் செய்யப்படும். என்று தெரிவித்துள்ளார்.

## ஆட்கடத்தலைத் தடுக்கும் உடன்பாட்டில் இலங்கை - ஆஸ்திரேலியா கைச்சாத்து!

கொழும்பு, செப். 08

ஆட்கடத்தலுக்கு எதிரான நடவடிக்கையில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையிலான புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றில், ஆஸ்திரேலியாவும் இலங்கையும் கையெழுத்திட்டுள்ளன.

கன்பராவில், நேற்று முன்தினம் நடந்த நிகழ்வில், ஆஸ்திரேலியாவின் சார்பில் குடிவரவு மற்றும் எல்லா பாதுகாப்பு திணைக்களத்தின் செயலர் மைக்கேல் பெசு லோவும், இலங்கையின் தரப் பில் பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்னவும் இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.



ஆட்கடத்தல் செயற்பாடு களுடன் தொடர்புடைய நபர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கும், ஆட்கடத்தல் முறைகள் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும், இடைமறித்தல் மற்றும் ஆட்கடத்தல்காரர்களை விசாரணை செய்வதற்கும், இந்த உடன்பாடு வழி செய்கிறது.

ஆட்கடத்தலைத்தடுக்கும் நடவடிக்கைகளுக்கு இலங்கை அதிகாரிகளுக்கு ஆஸ்திரேலியாபயிற்சிகளை அளித்து, அவர்களின்திறனைப்பலப்படுத்தவும் இந்த உடன் பாடு வழி செய்கிறது.

## வாசிப்புப் பழக்கம் அறிவு, மதிநுட்பம் நிறைந்த மனிதரை உருவாக்கும் என்கிறார் ஜனாதிபதி!

வாசிப்பு பழக்கம் அறிவு மற்றும் மதிநுட்பம் நிறைந்த மனிதரை உருவாக்கும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களிடம் வாசிப்புக்கான விருப்பத்தை விருத்தி செய்யும் நோக்குடன் அமுல்படுத்தப்பட்டுள்ள 'உத்தம நண்பன் புத்தகமே' செயற்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

இந்தத நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போதைய பிள்ளைகள் மற்றும் மக்களிடம் வாசிப்பு ஆர்வம் குறைந்துள்ளது.

நவீன தொழில்நுட்பத்துடன் சமூகத்தைப் பீடித்துள்ள சமூக ஊடகங்கள் அதற்குக் காரணமாக இருக்கின்றன. மீளவும் புத்தகங்களை வாசிப்பதில் மாணவர்களை ஈடுபடுத்தி இலக்கிய இரசனையுடைய, அறிவுமிக்க சமூகத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.



அடுத்த மாதம் கொண்டாடப்படும் வாசிப்பு மாதத்தோடு இணைந்ததாக ஜனாதிபதி செயலகத்தின் அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்ட பிரிவு கல்வி அமைச்சுடன் இணைந்து இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துகிறது.

இதன் மூலம் நிறைவான ஆளுமையுடைய பிள்ளைகளை உருவாக்குவதற்காக அறிவை ஊட்டுதலுடன், இலக்கிய இரசனைக்கு மாணவர்களைப் பழக்கப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் முதற்கட்டம் நாடு தழுவிய ரீதியில் உயர்தர வகுப்புக்களையுடைய 2820 பாடசாலைகளில் அமுல்படுத்தப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

அந்த பாடசாலைகளுக்கான மும்மொழி புத்தக பொதிகள் இரண்டு என்ற வீதம் வழங்கப்படுகின்றன. பாடசாலைகளுக்கான புத்தகங்களும் வழங்கும் பணியும் இந்த நிகழ்வின் போது ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நாடு தழுவிய ரீதியில் போட்டிகளை நடத்தி, புத்தகங்களை வாசித்தல் தொடர்பான ஆர்வத்தை அதிகரிக்கும் செயற்திட்டமும் அமுல்படுத்தப்படுகிறது.

கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம், இராஜாங்க அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன், மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, மாகாண கல்வி அமைச்சர்கள், ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ மற்றும் அரச அலுவலர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# இலங்கை - பங்களாதேஷ் வேலைத்திட்ட குழுவின் உயர்மட்ட அமர்வு இந்த வருட இறுதிப் பகுதியில்!

## அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு

கொழும்பு, செப். 08

இலங்கைக்கும் பங்களா தேஷுக்கும் இடையிலான கூட்டு வேலைத்திட்ட குழு வின் உயர்மட்ட அமர்வு இந்த வருட இறுதிப்பகுதியில் இடம்பெறும் எனக் கைத் தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் வர்த்தக அமைச்சர் டொபையில் அஹ மட்டை கொழும்பில் வைத்து சந்தித்து பேச்சு நடத்திய பின் னரே அவர் இதனைக் குறிப்பிட் டுள்ளார்.

கைத்தொழில் வர்த்தக அமைச்சில் நடைபெற்ற இந்த சந்திப்பில் இரு நாடுகளுக்கு மிடையிலான வர்த்தக, பொரு ளாதார உறவுகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

கடந்த ஐந்து வருட காலப் பகுதியில் வர்த்தக வளர்ச்சி



43 சதவீதமாக அதிகரிக்கப் பட்டதுடன் , கடந்த வருடம் வருமானமாக 142 மில்லியன் அமெரிக்க டொலரை எய்தி யுள்ளது.

பரஸ்பர நாடுகளின் வர்த்தக உறவை மேம்படுத்தும் காலம் தற்போது கனிந்து வருவதாகத் தெரிவித்த பங்களாதேஷ் வர்த் தக அமைச்சர், இரு நாடு களுக்குமிடையில் சுதந்திர வர்த்தக உடன்பாட்டை கைச் சாத்திடுவதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும் வலி யுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கிடையில் தற் போதைய வர்த்தக வளர்ச்சியின் பிரதிபலிப்பு போதுமானது இல்லை எனத் தெரிவித்த அமைச்சர் ரிஷாத் பதியுதீன், இவ்வருட இறுதிக்குள் இரு நாடுகளுக்குமிடையிலான மூன்றாவது கூட்டு வேலைத் திட்டக் குழு அமர்வை நடத்த முடியும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சுதந்திர வர்த்தக உடன்பாடு தொடர்பான எண்ணக் கருக் களைத் தமது அமைச்சின் அதி காரிகள் ஆராய்ந்து வருகின்ற னர் எனவும் கடந்த வருடம் ஜூலை மாதம் ஜனாதிபதி மைத் திரி பால சிறிசேன டாக்காவுக்கு விஜயம் செய்த பின்னர் வர்த் தக உறவுகள் மேலும் பலப் படுத்தப்பட்டுள்ளதையும் அமைச்சர் ரிஷாத் சுட்டிக்காட் டியுள்ளார். (க)

## தினசரி ராசி பலன் 08.09.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆவணித் திங்கள் 23 ஆம் நாள் துவிதியைத்திதி பகல் 10.41 மணி வரை. பின்னர் திருதியை. நட்சத்திரம். உத்தரட்டாதி பகல் 12.31 மணி வரை. பின்னர் ரேவதி. சித்தாமிர்த யோகம் முழுவதும். ராகுகாலம்: பகல் 10.36 மணி முதல் 12.08 மணி வரை. சுபநேரம்: மாலை6.04 மணி முதல் 7.34 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி: ஆவணிமாத தேய்பிறை திருதியை.**
**பிறந்த நட்சத்திர வழிபாடு: உத்தரட்டாதி.**

### 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம் :** சஞ்சலமான நாள். தனவரவு குறையும். எதிலும் சரிவர முடிவு எடுக்கமுடியாமல் தடுமாற்றம் ஏற்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு உண்டாகும்.

**ரிஷபம் :** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் வளமாக இருக்கும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். பேச்சுத் திறமையால் பல காரியங்களைச் சாதித்துக் கொள்வார்கள்.

**மிதுனம் :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு தாமதமாகும். தேவையற்ற வீண் செலவு கள் ஏற்படும். குடும்ப அமைதி சுமாராக இருக்கும். தொழிலாளர்கள் சிரமப்பட்டு முன்னேறுவார்கள்.

**கடகம் :** யோகமான நாள். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். உடலில் புது உற்சாகமும், சுறுசுறுப்பும் காணப்படும். வீடு, வாகன வசதிகள் வந்து சேரும். பகையாய் இருந்த உறவுகள் நட்பாக வந்து சேரும்.

**சிம்மம் :** கவலையான நாள். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். உடலில் ரோகங்கள் ஏற்பட்டு மருத் துவச் செலவுகள் உண்டாகும். கொடுக்கல் வாங் கலில் ஏமாற்றம் உண்டாகும்.

**கன்னி:** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். குடும்ப உறவு சீராக இருக்கும். வாகனத்தில் செல்லும் போது கூடுதல் கவனம் தேவை.

**துலாம் :** யோகமான நாள். தனலாபம் பெருகும். குடும்ப ஒற்றுமை மேம்படும். அசையாச் சொத்து களை வாங்கும் யோகம் உண்டாகும். சகோதர வழியால் நன்மை உண்டாகும்.

**விருச்சிகம் :** இன்பமான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். குடும்பத்தில் இனிமை கொலுவிருக்கும். பழைய கடன் பணம் வசூலாகும். காணாமற் போன பொருள்கள் திரும்பக் கிடைக்கும்.

**தனுசு :** யோசனையான நாள். வருமானம் குறையும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். உடல் ஆரோக் கியம் குன்றும். வியாபாரத்தில் பெரிய நட்டம் ஏற் படும்.

**மகரம் :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும் இறக்கமுமாக காணப்படும். தொழிலில் பிரயாசை அதிகரிக்கும். வீண் அலைச் சல்களால் உடல் நலம் பாதிப்படையும்.

**கும்பம்:** நன்மையான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் அன்னியோன்யம் அதி கரிக்கும். உத்தியோகத்தில் திறமையால் பாராட்டுகள் உயர்ச்சிகள் கிடைக்கும்.

**மீனம் :** அதிர்ஷ்டமான நாள். நிதி நிலைமை வளமாக இருக்கும். குடும்பத்தில் கலகலப்பும், களிப்பும் காணப்படும். புதிய தொழில் வாய்ப்புகள் கிடைக்கும்.

சந்திராட்டமநாள்: மகம், பூரம், உத்தரம் முதலாம் கால் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் அவசியம் சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

# சரத் பொன்சேகா ஒரு பைத்தியக்கார்; நாடாளுமன்றில் வீரவன்ஸ ஆவேசம்!

கொழும்பு, செப். 08

அமைச்சர் சரத் பொன் சேகா ஒரு பைத்தியம் என்று தேசிய சுதந்திர முன்னணி யின் தலைவரான விமல் வீரவன்ஸ நாடாளுமன்றத்தில் ஆவேசத்துடன் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளு மன்றத்தில், ஜெனரல் ஜய சூரிய மீது பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா சுமத்தியுள்ள குற்றச்சாட்டு தொடர்பாக தினேஸ் குணவர்த்தன கேள்



விகளை எழுப்பியிருந்தார்.

இததையடுத்து, நடந்த விவா தத்தில் ஆவேசமாக உரை யாற்றிய விமல் வீரவன்ஸ, அமைச்சர் சரத் பொன் சேகா என்ன பைத்தியமா? முன்னாள் இராணுவ ஜெனரல் ஒருவர் போர்க்குற்றங்களை இழைத்தார் என்று அமைச்சர் ஒருவர் குற்றம்சாட்டுவது ஒன்றும் சிறிய விடயமல்ல என்றும் அவர் ஒரு பைத்தியக் காரன் என்று கூறியுள்ளார்.

## பஜனையுடன் கூட்டுப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,செப்.08

நல்லூர் ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனையும் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பஜனை நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் இடம்பெறவுள்ளன.

அவ்வேளை கூட்டுப் பிரார்த்தனைப் பாடப்புத்தகமும் அடியார்களுக்கு வழங்கப்படவிருக்கின்றது. (உ)

## நாளை மின்தடை

யாழ்ப்பாணம்,செப்.08

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க் கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை காலை சனி காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரை **யாழ் பிரதேசத்தில்**- மானிப்பாய் ஒரு பகுதி, வல்லி புரம், உபயகதிர்காமம், புனிதநகர், கற்கோவளம், மாதனை, நெல்லண்டை, பருத்தித்துறை வெளிச்ச வீடு, சிவப்பிரகாசம், 3 ஆம் குறுக்குத்தெரு பிரதேசம், கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும்-

**வவுனியா பிரதேசத்தில்** -

தாண்டிக்குளத்திலிருந்து புளியங்குளம் வரை, ஓமந்தை வீட்டுத்திட்டம், ICT கல்லூரி, Union Alliance Ltd, AMP ஓமந்தை, ICT கல்லூரி, ஓமந்தை மீன்பிடிவலைத் தொழிற்சாலை, வேளாங்குளம், மடுக் குளம், வேளாங்குளம் விமானப்படை ஆகிய பிரதே சங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறி யியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## தென்மராட்சி பணிப்பாளருக்கு பாராட்டு விழா

தென்மராட்சி,செப்.08

சேவையில் இருந்து ஓய்வுபெறும் தென்ம ராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமாருக்குத் தென்மராட்சி பிரதேச மக்கள் நடத்தும் பாராட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு, சாவகச்சேரி நகரின் கலாசார மண்ட பத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் சாவகச் சேரி இந்துக் கல்லூரி ஓய்வு நிலை அதிபர் அ.கயிலாயப்பிள்ளை சிறப்புரை ஆற்றுவார்.

ஆசியுரைகளை யாழ். சின்மயா மிஷன் ஜாக்ரத சைத்தன்ய சுவாமிகள், சாவகச்சேரி கத்தோலிக்க பங்குத் தந்தை அருட் பணி ம.றெக்ஸ் சௌந்தரா அடிகள், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ் தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகி யோர் நிகழ்த்துவர். (இ)

# கௌதமபுத்தரை எல்லைக் கற்களாக மாற்றுகின்றமை மோசமான செயல்!

## மாணிக்கமடு சிலை வைப்புக் குறித்து ஹக்கீம் விசனம்

எல்லோரும் மதிக்கின்ற கௌதம புத்தரை எல்லைக் கற்களாக மாற்றுவது மிக மோசமானசெயற்பாடாகும். அமைதியாக இருக்கின்ற சிறுபான்மைச் சமூகத்தின் மத்தியில் புத்தர் சிலைகளை நிறுவி, அதை பெரும்பான்மையினரின் எல்லைப் பிரதேசமாக மாற்றுகின்ற முயற்சியை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அம்பாறை மத்தியமுகாம் 4ஆம், 5 ஆம் கொலனி அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை அமீர் அலி விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றபொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-



முஸ்லிம்களின் புனித ஹஜ் பெருநாள் தினத்தில் மாணிக்கமடுவில் புத்தர் சிலை வைப்பதற்கு சில பேரினவாத சக்திகள் எடுத்துள்ள முயற்சி வலிந்து வம்புக்கு இழுப்பதாகும். ஆள்களே இல்லாத மாணிக்க மடுவில் ஏதற்கு புத்தர் சிலைகளை வைக்க வேண்டும்?

முஸ்லிம்களை ஆத்திரப்படுத்தி, அவர்களைச் சண்டையிட வைத்து கலவரத்தை உருவாக்கி எல்லாப் பிரச்சினைகளையும் முஸ்லிம்களின் தலையில் போடும் நோக்கில்தான் இந்த முஸ்தீபு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த விடயத்தில் சிறுபான்மை சமூகம் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும்.

பள்ளிவாசல்கள் உடைக்கப்படும் போது கையைக் கட்டிக்கொண்டு வேடிக்கை பார்த்த காக்கிச்சட்டைக் காரர்கள், மாணிக்கமடுவில் சிலை வைக்கும் போது உற்சாகமாக பூரண அனுசரணை வழங்கிக்கொண்டிருந்தார்கள். ஆனால், அதைத் தடுக்கச் சென்ற முஸ்லிம்களை தடுத்திநிறுத்தினார்கள்.

காக்கிச்சட்டை அணிந்திருப்பவர்களின் இவ்வாறான செயற்பாடு நல்லாட் சியில் நடைபெற முடியுமா என்பது கேள்விக்கு உட்படுத்தப்படவேண்டிய விடயம்.

பொலிஸாரின் இந்த நடவடிக்கைள் குறித்து பிரதமரிடம் அதிருப்தியுடன் எடுத்துக் கூறியிருக்கிறேன். பிரதேசத்தின் பொலிஸ் அத்தியட்சர் இதற்குப் பதிலளிக்க வேண்டும். பிராந்திய பொலிஸ் அத்தியட்சர் பிரதமர் முன்னிலையில் இந்த விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தவேண்டும். இது ஒரு சாதாரணமான விடயமல்ல. எங்களுடைய ஆட்சியில் சட்டமும் ஒழுங்கும் ஒரு சமூகத்துக்கும் மாத்திரம் உரித்தானதாகப் பார்க்கப்படுவதற்கு நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

இதை இந்த ஆட்சிக்காலத்தில் நிறை வேற்ற வேண்டும். கடந்த ஆட்சியாளர்கள் கற்றுக்கொண்ட பாடங்களை இந்த ஆட்சியாளர்களும் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் வரக்கூடாது. அதற்காகத்தான் இந்த விவகாரத்தை நாங்கள் பிரதமரிடம் கூறி, பிரச்சினைக்குத் தீர்வை வழங்குமாறு காரசாரமாகக் கூறியிருக்கிறோம்.

பொலிஸாரின் அனுசரணையுடன் மாணிக்கமடுவில் புத்தர் சிலை வைக்கப்படுவதற்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அதற்கு இந்த மண்ணிலேயே முடிவு கட்டப்பட வேண்டும். இந்தவிடயம் தொடர்பாக நாங்கள் அமைதியாகப் பேச்சு நடத்தி, குழு அமைத்து செயற்படுகின்ற போது, அது முற்றுப்பெறுவதற்கு முன்னர் வேண்டுமென்று ஹஜ் பெருநாள் தினத்தில் குழப்பத்தை ஏற்படுத்த நினைக்கின்ற குழப்பவாதிகளை இனிமேலும் அனுமதிக்க முடியாது.

மியன்மாரில் ஆட்சியாளர்களின் அட்டூழியத்தால் பயங்கரமான இனப்படுகொலை நடந்துகொண்டிருக்கிறது. அதேபோன்ற அட்டூழியங்களுங்கு வழிகோலுகின்ற வகையிலான எந்த செயற்பாடுகளையும் நாங்கள் அனுதிக்க முடியாது. நல்லாட்சி அரசாங்கத்தைத் கொண்டுவந்த தமிழர்களும், முஸ்லிம் களும் இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு அடிமைகளாக, வாய்மூடி மௌனிகளாக ஒருபோதும் இருக்க முடியாது.

நாடாளுமன்றத்தில் அரசமைப்புத் திருத்தம் நடைபெறுகின்றபோது இந்த விடயங்களை மெத்தனப்போக்குடன் இனிமேலும் பார்க்க முடியாது. எனவே, இந்த விடயத்தில் மத்திய அரசின் நடவடிக்கைகள் நியாயபூர்வமாக இருக்க வேண்டும். அதில் அதிகாரிகள் பக்கச்சார்பாக நடந்து கொள்ள முற்படுகின்றபோது, அவற்றை சரிசெய்கின்ற தார்மீகப் பொறுப்பு ஜனாதிபதிக்கும் பிரதமருக்கு இருக்கிறது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதில் எவ்வித விட்டுக்கொடுப்புமின்றி, ஆட்சியாளர்களைச் செய்விக்கின்ற ஒரு நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம்.

மாணிக்கமடு ஒதுக்குப்புறமாக உள்ள தமிழ்ப் பிரதேசம் என்று ஏனைய தமிழர்கள் இந்த விவகாரத்தை உதாசீனம் செய்ய முடியாது. இது எல்லா சிறுபான்மை மக்களின் பிரச்சினை. இதன் பின்னாலிருப்பது ஆக்கிரமிப்பு என்பது தெளிவான விடயம். நிலத்தை ஆக்கிரமிப்பதற்கான ஓர் ஆரம்ப நடவடிக்கையாகத்தான் இதைப் பார்க்க வேண்டும். எல்லைக்கற்களாக சிலை வைக்கின்ற அட்டூழியத்துக்கு முடிவு கட்ட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், பக்குவப்பட்ட ஓர் அரசியல்வாதி. அந்தக் கட்சிக்குள்ளும் தீவிரமாகப் பேசுகின்ற சிலர் இருக்கின்றனர். சாத்தியமானவற்றை சாதிக்கின்ற கலைதான் அரசியல். சிறுபான்மைச் சமூகங்களுக்கு நிரந்தர தீர்வை அடை வதற்கு நல்லதொரு வாய்ப்பு இந்த ஆட்சியைக் கொண்டு வந்த பின்னணியில் உருவானது.

சிறுபான்மை மக்கள் வரலாறு காணாத ஆதரவை வழங்கியதால் தான் இந்த நல்லாட்சி அரசாங்கம் உருவாகியுள்ளது. கடந்த அரசாங்கத்தில் நடந்தது போன்று இந்த அரசாங்கத் திலும் அநியாயங்களை நடைபெற்றால், அவற்றைக் கேள்வி கேட்கின்ற தார்மீக உரிமை சிறுபான்மை மக்களுக்கு இருக்கிறது.

கிழக்கு மாகாணசபையில் எல்லாக் கட்சிகளும் ஒன்றிணைந்து ஆட்சி செய்துகொண்டிருக்கிறோம். இதன் மூலம் தேசிய நல்லிணக்க ஆட்சியை செய்துகொண்டிருக்கிறோம் என்று பகட்டுக்கு கூறமுடியாது. உண்மையான நல்லிணக்கம் என்னவென்பதை இந்த மாகாண சபையில் நாங்கள் காட்டவேண்டும். அநியாயங்கள் நடக்கின்ற போது அப்புறம் பார்த்துக் கொள்வோம் என்று கடந்த அரசாங்கம்போல, இந்த அரசாங்கமும் கூறுவதை நாங்கள் சகித்துக்கொண்டிருக்க முடியாது.

மாகாணசபைகளுக்கு சட்டமும் ஒழுங்கும் அதிகாரம் கிடைக்கக் கூடாது என்பதில் எவ்வித நியாயமும் கிடையாது. தமிழர் களும், முஸ்லிம் களும் மாகாணசபையைக் கைப்பற்றி எங்களுக்குரிய காணி, பொலிஸ் அதிகாரங்களைத் தட்டிப் பறித்துக் கேட்கின்ற அதிகாரம் அடுத்து வரும் தேர்தலன்றி, வேறொன்றும் இருக்கமுடியாது.- என்று கூறினார்.

இந்தக் கூட்டத்தில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம். நஸீர், கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான ஐ.எல்.எம். மாஹிர், ரி.கலையரசன், மு.கா. தவிசாளர் அப்துல் மஜீத், நாவிதன்வெளி அமைப்பாளர் ஏ.சி. நிஸார், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தலைவர் கே.ஏ. அன்ஸார், கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.






தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

ஜோர்ஜ் எச். டபிள்யூ. புஷ் பனாமா மீது படையெடுத்ததார். அத்துடன், ஈராக் மீதான முதல் படையெடுப்பையும் நடத்தினார். கிளிண்டன் மீண்டும் மீண்டும் ஈராக் மீது குண்டுவீசியதுடன், ஆயிரக்கணக்கான ஈராக்கியர்கள் உயிரிழக்கும் வகையில் கடுமையான தடையாணைகளைத் திணித்தார். சேர்பியாவுக்கு எதிரான வான்வழி போருடன்



இதை அவர் பின்தொடர்ந்தார். தேர்தலைக் களவாடி அதிகாரத்திற்கு வந்த ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், ஒரு மில்லியனுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்ட போர்களை தொடங்கிர். அவரது கொள்கையின் ஒரு கருவியாக சித்திரவதையை அனுமதித்தார். நம்பிக்கை'' மற்றும் ''மாற்றத்தின்'' ஒரு வேட்பாளரான ஒபாமா, டிரோன் படுகொலைகள் மற்றும் உள்நாட்டு உளவுபார்ப்புக்களை அமைப்பு மயப்படுத்திய அதேவேளையில், நூற்றுக் கணக்கான பில்லியன்களை வோல் ஸ்ட்ரீட்ஸுக்கு கைம்மாற்றினார்.

டைம்ஸும் சரி அரசியல் மற்றும் ஊடக ஸ்தாபகமும் சரி, மனித உரிமை



கள் மற்றும் சகோதரத்துவ அன்பு குறித்த ஜனநாயக வாய்வீச்சுக்களைக் கொண்டு ஆளும் உயரடுக்கின் குற்றகரமான கொள்கைகளை மூடிமறைக்க விரும்புகின்றன.

ட்ரம்ப் தேர்ந்தெடுக்கப்பட்டமை ஒரு திருப்புமுனையாகும். பரந்த மக்கள் பிரிவுகளிடையே அதிகரித்து வரும் விரக்தி மற்றும் அன்னியப்படலுக்கு முறையிடும் ஒரு பாசிச வாத இயக்கத்தின் அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கும் சட்டபூர்வமாக்குவதற்கும் அவர் முயன்று வருகிறார். ஆனால், நாஜி வன்முறையை அவர் பாதுகாப்பது வெறுமனே தனியொருவரின் பிற்போக்கான மற்றும் பின்தங்கிய கண்ணோட்டத்தைப் பிரதிபலிக்கவில்லை. ட்ரம்புடன் சேர்ந்து, அமெரிக்காவை நடத்துகின்ற நிதியியல் செல்வந்த தன்னலக் குழுவின் குற்றங்கள் அனைத்தும் உலகம் காணும் வகையில் அரசியல் வாழ்வின் மேற்புறத்துக்கு வந்துள் என.

தலைமை செயலதிகாரிகளும் மற்றும் பானன் போன்ற இராணுவ மற்றும் உளவுத்துறை அதிகாரிகளும், ட்ரம்ப் எனும் கிருமிக்கு அரசியல் மாற்று மருந்து என்பதை போல, ஊடகங்கள் அவர்களின் கருத்துக்களை முன்வைக்கின்றன.

உண்மையில்,இராணுவம் மற்றும் உளவுத்துறை முகமைகள் முன்பினும் அதிகமாக அரசியலில் செல்வாக்கு செலுத்துகின்ற நிலையில், ட்ரம்ப் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரில் இருந்து இதை நோக்கித்தான் ஜனநாயகக் கட்சியினர் அவர்களின் ஒட்டுமொத்த முறையீட்டையும் திருப்பி உள்ளனர் என்கின்ற நிலையில், இது அமெரிக்க ஜனநாயக முறிவின் மற்றொரு வடிவமாகும். இது அதே நோயின் இன்னோர் அறிகுறியாகவும் உள்ளது.

**அமெரிக்க அரசியல் போர்முறைகளுக்குப் பின்னால், நிதியியல் பொறிவு, சமூக கிளர்ச்சி மீது அதிகரித்துவரும் அச்சங்கள்.**

ரொனால்ட் ட்ரம்ப் தேர்வானமையுடன் முடுக்கிவிடப்பட்ட அமெரிக்க பங்குச் சந்தையின் உயர்வு ஒரு மிகப் பெரும் வீழ்ச்சியை நோக்கிச் செல்கிறதென அமெரிக்க மற்றும் உலகளாவிய நிதி யியல் வட்டாரங்களில் கவலைகள் அதிகரித்து வருகின்றன. இந்தக் கவலைகள், அமெரிக்க அரசியல் ஸ்தாபகத்தில் நடைமுறையளவிலான உள்நாட்டு போரை உந்திக் கொண்டிருப்பதில் அடியிலிருக்கும் சில சக்திகளை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

டோவ் ஜோன்ஸ் மற்றும் பிற சந்தை குறியீடுகளைச் சாதனையளவிற்கு உயர்த்திய ''ட்ரம்ப் வர்த்தகம்'' முடிந்துவிட்டது. அதிகரித்தளவில் ஜனாதிபதியே ஒரு பொருளாதார சுமையாக மாறியுள்ளார் என்ற கண்ணோட்டம் வோல் ஸ்ட்ரீட் ஊக வணிகர்கள் மற்றும் பெருநிறுவன செயலதிகாரிகளிடையே அதிகரித்து வருகிறது. சார்லட்வில் நாஜி அட்டூழியம் மீதான மோதலை அடுத்து வணிக மனோபாவம் உச்சநிலைக்கு வந்தது. நவ-நாஜிக்களைப் பாதுகாக்கும் ட்ரம்ப் கருத்துக்கள் சர்வதேச அளவில் அமெரிக்க ஏகாதிபத்திய நலன்களுக்குக் குழிபறிப்பனவாக மற்றும் உள்நாட்டில் சமூக, அரசியல் ஸ்திரமின்மையைக் கட்டவிழ்த்து விட அச்சுறுத்துவதாகப் பார்க்கப்பட்டன.

ஆனால், ட்ரம்ப் உருவாக்கிய ஸ்திரமின்மை மீதான கவலைகள் ஆழ்ந்த அச்சங்களைப் பிரதிபலிக்கின்றன. அமெரிக்க ஆளும் வர்க்கம், தற்போது வெள்ளை மாளிகையை ஆக்கிரமித்திருப்பவருக்கும் அப்பாற்பட்டு வெகு தூரம் நீண்டுள்ள பிரச்சினைகளை எதிர்கொள்கிறது.

அமெரிக்காவில் பொருளாதார மற்றும் சமூக பிளவுகள் இந்த முந்தைய புரட்சிகர மேலெழுச்சி காலகட்டத்தை ஒத்திருக்கின்றன என Dalio எழுதினார். அதுபோன்ற காலங்களில் (உள்ளேயும் வெளியேயும்) மோதல்கள் அதிகரிக்கின்றன. ஜனரஞ்சகவாதம் மேலெழுகிறது. ஜனநாயகங்கள் அச்சுறுத்தப்பட்டு, போர்கள் ஏற்படக்கூடும். அது எந்தளவுக்கு மோசமடையும் என்பதை அவரால் கூற முடியாது.

அண்மையில் பிரசுரிக்கப்பட்ட ஒரு கருத்துரையில், உலகின் மிகப் பெரிய தனியார் முதலீட்டு நிறுவனமான பிரிட்ஜ்வாட்டர் நிறுவனத்தின்



தலைவர் Ray Dalio குறிப்பிடுகையில், அரசியல் இதற்கு முன்னர் நாம் பரந்தளவில் 1937 இற்கு ஒத்த விதத்தில் கண்டு வந்ததை விட அனேகமாக இன்னும் பிரமாண்டமான பாத்திரம் இப்போது வகிக்க உள்ளது என்றார். அரசியல் மோதல்களை அமெரிக்காவால் கடந்து வர முடிந்தாலும் சரி, அது முந்தைய செலாவணி கொள்கைகள் மற்றும் நிதிக் கொள்கைகளை'' விட அதிக பாதிப்புகளைக் கொண்டிருக்கும். என்றார்.

1937 குறித்த மேற்கோள் குறிப்பிடத்தக்கதாகும். அந்த ஆண்டின் முதல் பாதியில் அமெரிக்க பொருளாதாரத்தில் ஒரு மிகப்பெரும் வீழ்ச்சி இருந்தது-அந்த வீழ்ச்சி பெருமந்த நிலைமைக்கு இடையே 1932 இல் நடந்ததை விடவும் மிக வேகமாக இருந்தது. அதே ஆண்டுதான் வாகனத் துறை மற்றும் எஃகுத் தொழில்துறையில் வர்க்க போராட்டம் வெடித்தது.

அமெரிக்காவில் பொருளாதார மற்றும் சமூக பிளவுகள் இந்த முந்தைய புரட்சிகர மேலெழுச்சி காலகட்டத்தை ஒத்திருப்பதாக Dalio எழுதினார். அதுபோன்ற காலங்களில் (உள்ளேயும் வெளியேயும்) மோதல்கள் அதிகரிக்கின்றன. ஜனரஞ்சகவாதம் மேலெழுகிறது. ஜனநாயகங்கள் அச்சுறுத்தப்பட்டு, போர்கள் ஏற்படக்கூடும். அது எந்தளவுக்கு மோசமடையும் என்பதை அவரால் கூற முடியாது என்றும், அதில் அவருக்கு விருப்பமும் இல்லை என்பதையும் அவர் சேர்த்துக்கொண்டார். நல்லிணக்கத்தை விட அனேகமாக மரணம் வரை போராட்டமே இருக்கக் கூடும் என்ற புள்ளிக்கு மோதல்கள் இப்போது தீவிரமடைந்துள்ளன.




(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய ‘போரும் சமாதானமும்’ என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

‘சுதந்திர வேட்கை’ என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் ‘Will To Freedom’ என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் ‘தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு’ என்ற பீடிகையுடன் வெளியானது.



89




**அத்தியாயம் - VI**

## ஆக்கிரமிப்பு இராணுவம்

இந்தியப் படைகளின் பங்கும் பணியும் பற்றி, கொழும்பு அமைதிப் பேச்சில் கலந்து கொண்ட விடுதலைப் புலிப் பிரதிநிதிகள் முன்வைத்த ஆழம் மிக்க ஆய்வும், அதை அடுத்து வெளியான கூட்டு அறிக்கைகளும் பேச்சின் நோக்கத்தையும் உள்ளடக்கத்தையும் வெளிப்படுத்திய போது ராஜீவ் நிர்வாகத்துக்கும் பிரேமதாச ஆட்சிக்கும் இடையே ஒரு நெருக்குவார நிலை தோன்றியது. புதுடில்லியை அவமதிக்க விடுதலைப் புலிகளுக்கு ஒரு தளம் வழங்கியமைக்காக இந்திய வெளியுறவு அமைச்சு, சிறி லங்கா அரசிடம் கடுமையான கண்டனம் தெரிவித்தது. இந்தியாவின் பார்வையிலே இந்திய – இலங்கை ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு அமைவாகவே இந்திய அமைதிப் படைகள் சிறிலங்காவின் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

அதாவது, விடு தலைப் புலிகளின் ஆயுதங்களைக் களைவதன் மூலம் அமைதியை நிலை நாட்டி சிறிலங்காவுக்கு உதவுவதற்காகவே இந்திய அமைதிப் படை அனுப்பப்பட்டது. ஆனால், இப்பொழுது சிங்கள அரசு, தமது பரம வைரியுடன் கைகோர்த்துக் கொண்டு சிங்களத்தின் போரை நடத்திக் கொண்டிருக்கும் இந்திய இராணுவப் பிரிவுகளை அவமானப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

பேச்சு அரங்கிலே இந்தியாவின் கண்டனங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போது, அதனை மறுத்துரைத்த விடுதலைப்புலிகள், அமைதியை நிலை நாட்டுவதிலும், புலிகளின் ஆயுதங்களைக் களைவதிலும் சரி, இந்திய அமைதிப் படைகள் படுமோசமான தோல்வி கண்டுவிட்டன என்று சுட்டிக்காட்டினர். மாறாக, போர் விரிவாக்கம் கண்டிருந்ததோடு, இந்தியப் படைகள் தங்கள் இழப்புக்களை ஈடுகட்டுவதற்காக, தமது துப்பாக்கிகளை தமிழ் மக்கள் மீது பழிவாங்கும் நோக்கோடு திருப்பிக் கொண்டிருந்தன.

இந்த அமைதி காக்கும் நடவடிக்கையின் போது ஐயாயிரத்துக்கும் அதிகமான தமிழ்ப் பொது மக்கள் உயிரிழந்திருந்தனர். அப்பாவிப் பொது மக்கள் உயிர் பலியாகிவிட்டமையைச் சுட்டிக்காட்டிய தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் , தமிழ் மக்களை சிறிலங்கா அரசு தனது குடிமக்கள் என்று கருதுமேயானால், அவர்களுடைய உயிர்களை காப்பாற்றுவதைத் தனது கடமையும் பொறுப்பும் என ஏற்றுக் கொண்டு அவர்களின் உயிர்களைக் காப்பாற்ற வேண்டும் என்றும் தர்மம் உணர்த்தினர்.

## ஹமீதின் பங்கு

புதுடில்லி தனது அதிருப்தியை வெளியிட்டதையடுத்து, ஒவ்வோர் அமர்வின் பின்னரும் ஊடகங்களுக்கான கூட்டறிக்கைகளைத் தயாரித்து வெளியிடுவது கடினமாகியது. இந்தக் கடினமான பணி ஹமீதுவிடமும் பாலாவிடமும் என்னிடமும் ஒப்படைக்கப்பட்டது. இந்திய – இலங்கை ஒப்பந்தம் மீதான கண்டனம், இந்தியப் படைகள் புரியும் அட்டூழியங்கள், இந்திய அமைதிப் படைகள் வெளியேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஆகியவையே பேச்சில் பெரிதும் அலசப்பட்ட விடங்களாக இருந்தமையால், இந்திய அரசுக்கு மனம் நோகடிக்காத அல்லது ஆத்திரமூட்டாத வகையில் கூட்டறிக்கைகளைத்தயாரிப்பது சவாலானதாக அமைந்தது. சில வேளைகளில் சில வாக்கியங்களைத் தயாரிக்கவே பல மணி நேரம் பிடித்தது. கலந்துரையாடலின் கருவும் உள்ளடக்கமும் கூட்டறிக்கைகளில் சேர்க்கப்பட வேண்டும் என்று பாலா வலியுறுத்துவார்.

இந்தியாவுடன், பிரச்சினையைத் தவிர்க்க வேண்டும் என்று ஹமீது விரும்புவார். பேச்சுக்களின் விரிவான விளக்கங்களை நீக்கி விட்டு, புறச்சட்டங்களை மட்டும் விட்டு வைத்தார். தமது மக்களின் இழி நிலையாலும் துயர நிலையாலும் மனப் பாதிப்புக் கண்டி ருந்த பாலா, உண்மை நிலை உலகுக்கு உணர்த்தப்பட வேண்டும் என்று வாதிட்டார். இராஜதந்திரத்தில் ஆழ்ந்த அனுபவம் உடைய ஹமீது, அனைத் துலக உறவுகளில் ஏற்படக் கூடிய உணர்வலைகள் பற்றிய அக்கறையுடையவராக இந்தியாவை அதிருப்திப்படாது வைத்திருக்க விரும்பினார். இதனால் எமது முயற்சிக்கு நேரம் பிடித்தது. எமது பொறுமையும் சோதனைக்கு உள்ளானது. ஆனால், ஹமீதுடன் பணிபுரிகின்றமை மகிழ்ச்சியாகவும் இருந்தது. முயற்சிகளைத் தீர்ப்பதில் அவர் சமர்த்தர்.

ஹமீதைத் தேர்ந்தெடுத்தமை பிரேமதாசாவுடைய இராஜதந்திரத்தினதும் அரசியலினதும் கூர்மதி என்றே கூறவேண்டும். ஹமீது இதில் சம்பந்தப்படாது போயிருப்பாராயின், இந்தியப் படை தொடர்ந்தும் வடக்கில் இருந்திருக்கும் என்றே கூற வேண்டும். ஹமீது தெரியப்பட்டதற்குக் காரணம் அவர் இலங்கை முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதாகும். நாட்டின் தமிழ் பேசும் இனங்கள் உறுப்பினர்கள் என்ற வகையிலே, விடுதலைப் புலிகள் அணிக்கும் ஹமீதுக்கும் இடையில் ஒரு நல்லிணக்கமும் கூடிப் பணி புரிவதற்கான சுமுக நிலையும் ஏற்படும் என்று பிரேமதாசா கருதினார். அது பொருத்தமாகவே பட்டது. ஆனால், விடுதலைப் புலிகளுடன் நடந்த பேச்சிலே ஹமீது வெற்றி கண்டார் என்றால், தமிழ் மக்கள் பால் அவர் கொண்டிருந்த புரிந்துணர்வு மட்டுமே என்று குறைத்து எடைபோடக் கூடாது. அவரிடம் இருந்த சிறந்த தனிப்பட்ட பண்புகளுமே காரணம் என்று கூற வேண்டும். உருவத்திலே ஹமீது குட்டையானவரே. ஆனால், ஆளுமையில் அவர் பென்னம் பெரியவர் என்பதே எனது அனுமானம் ஆகும். அவருடைய திறமை மிக்க இராஜதந்திரத்துக்கும், பொறுமை தான் காரணமா அல்லது வெளியுறவு அமைச்சராக அவர் பெற்ற நீண்ட கால அனுபவம் அவரது எல்லையற்ற பொறுமையைப் படிய வைத்ததா என்பதைத் தீர்மானிக்க எனது அறிவு போதாது என்பேன். ஆனால், ஹமீதுடைய வியக்கத்தக்க பண்பாக அவருடய பொறுமையையும் நிச்சயம் குறிப்பிடலாம். பொறுமை, அவரை ஓர் அறிவாளியாகவும் ஆக்கி இருந்தது. அவருடைய உள்ளுணர்வு கத்திமுனைக் கூர்மையானது. பேச்சு அரங்கிலே அவர் வந்து அமரும் போது குறித்த சில நோக்கங்களுடனேயே வருவார். அவற்றைச் சாதிப்பதற்கான நன்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தந்திரோபாயமும் அவரிடம் இருக்கும். உண்மையில் ஒரு சதுரங்க ஆட்டத்தில் ஈடுபட்டு இருப்பது போல, தமது வாதத்தையும் அவர் திட்டமிட்டு இருப்பார்.

ஹமீது, தான் திட்டமிட்ட பாதையிலே பேச்சை வழி நடத்திச் செல்வதை ஒரு பார்வையாளராக இருந்து கவனித்துக் கொண்டிருக்கும் வாய்ப்பு. விடுதலைப் புலி அணியின் செயலாளர் என்ற வகையிலே எனக்கு கிடைத்தது. எத்தகைய கருத்து வெளியிடப்படும் என்ற எதிர்பார்ப்போடு ஒவ்வொரு வார்த்தையையும் அளந்தே பேசுவார். உடனடிப் பதிலும் அவரிடம் தயாராக இருக்கும். இப்படி, தனது இலக்கை நோக்கிய முடிவை எய்த, தமது விவாதத்தை அவர் நகர்த்திக் கொண்டிருப்பார். ஹமீதுவுடைய இலக்கு எது என்று புரிந்து கொண்டு பாலா தம்மைத் தயாராக்குவார். இருவருக்கும் இடையே இடம்பெறும் அறிவுசார் மோதல் எமக்கு விருந்தாக அமையும். தமக்கு சமநிலையான சவாலை எதிர்கொண்டதும் மோதலை மெள்ளத் துண்டித்துக் கொள்ளும் தருணமும் ஹமீதுக்குத் தெரியும்.

சிறிலங்கா குழுக்களின் தலைவர் என்ற நிலையில் தமது அணித் தோழர்களுடைய கருத்தமைவும் உணர்வுகளும் எப்படி இருக்கின்றன என்று நாடி பிடித்துக் கொண்டே இருக்கும் ஹமீது, முரண்பாடுகள் தலைதூக்கும் போது அவற்றைச் சாதுரியமாகத் தவிர்த்து விடுவார். பேச்சின் தொனி பழுது படாமலும் இணக்கப்பாட்டுக்கு வருவது ஊறுபடாமலும் பார்த்துக் கொள்வார். பிரேமதாசா மேலும் ஒரு புத்திசாதுரியமான காரியம் செய்திருந்தார். கடும் போக்கு இனவாதிகளான லலித் அத்துலத் முதலியையும் காமினி திஸாநாயக்கவையும் பேச்சு அணியில் சேர்க்காது விட்டிருந்தார். அவர்களுக்கும் எமக்கும் இடையே கடும் கசப்பு உணர்வு நிலவியமையால், பேச்சு அரங்கிலே எதிரெதிரே இருக்கைகளில் நாம் அமர்ந்தோமே என்றால், முதல் சுற்றுப் பேச்சையே நாம் கடந்திருப்போமா என்பது சந்தேகமே.


வெளிப்படையான அரங்கிலே பேசப்படுவதும் குறிப்பிடப்படுவதும் எப்போதும் முழுமை பெற்று விடுவது இல்லை என்பது பெரும்பாலான அனுபவம் மிக்க இராஜதந்திரிகளுக்குத் தெரியும். தனியாக நடைபெறும் பேச்சு சில வேளைகளில் பகிரப் பேச்சைவிட முக்கியமானதாக அமைந்து விடும் தனியாக நடத்தும் இராஜதந்திர முயற்சியிலே ஹமீது பெரும் நம்பிக்கை வைத்திருந்தார். சிக்கலானதும் உள்ளார்த்தமானதுமான பிரச்சினையைத் தோற்றுவிப்பதுமான விடயங்களை மற்றவருடைய பார்வையில் படாது, பிரத்தியேகமான சூழலில், நம்பிக்கை அடிப்படையில் நடத்தப்படுவதையே அவர் விரும்பினார். இந்த அணுகுமுறையோடு மாலை வேளைகளில் எமது விடுதியில் பாலாவுடன் தனிப்பட்ட கலந்துரையாடல்களை அவர் அடிக்கடி நடத்தினார். இப்படியான சந்திப்புக்களின் போது ஹமீதுவும் பாலாவும் ஓர் ஆரோக்கியமான புரிந்துணர்வையும் ஒருவருக்கு ஒருவர் இடையிலான மரியாதையையும் கட்டியெழுப்பினார்கள்.

(தொடரும்...)

# மதப் பிரிவினையை விடுத்து ஒன்றுபட்டு முன்னேறுவோம்!

மதத்தின் பேரால் அடிபட்டுச் சாவதும் பிரிந்து நிற்பதும் எமது அறியாமையாகும். இதை அனைத்து மதங்களும் மதத் தலைவர்களும் இடித்து உரைக் கின்றபோதும், அதை நாம் கேட்பவர் களாக இல்லை. இந்து சமுத்திரத்தின் முத்தென விளங்குன்ற இந்த ஈழ மணித்திருநாட்டில் வாழ்கின்ற மூவின மக்களும் பகைமைகளை மறந்து சகோதரர்களாக வாழத் தலைப்படுவார் களானால் இந்த நாட்டுக்கு இணை இந்த நாடுதான் மட்டுமே இருக்க முடியும். எனவே, காலம் கடந்த நிலையில் எமது மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு, ஒருமித்து இந்த நாட்டை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு செல்ல முயற்சிக்க வேண்டும். ஒற்று மையே இதற்கு வழி வகுக்கும்.

– இவ்வாறு வட மாகாண முதல மைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரி வித்தார்.



மன்னார் – எருக்கலம்பிட்டியில் பத்தாவது ஹஜ் பெருவிழா வெகு வாக மூன்று தினங்கள் அதாவது கடந்த ஞாயிறு தொடக்கம் பல விளையாட்டு நிகழ்வுகளுடன் நடை பெற்றது. இறுதி நாளாகிய செவ்வாய் கிழமை வட மாகாண சபை உறுப்பி னர் எச்.எம்.றயீஸின் ஏற்பாட்டில் அழைக்கப்பட்ட வட மாகாண முதல மைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். செட்டிகுளம் மக்கள் வங்கி முகாமை யாளர் அப்துல் ஹக் முகமட் ஆரூஸ் தலைமையில் நடைபெற்ற இறுதி நிகழ்வின்போது முதலமைச்சர் விக் னேஸ்வரன் இங்கு தொடர்ந்து உரை யாற்றுகையில் தெரிவித்தவை வரு மாறு:-



வட மாகாணத்தில் மிகப் பெரும் எண்ணிக்கையிலான முஸ்லிம் மக் கள் வாழும் கிராமம் இது. 1990 ஆம் ஆண்டு இப்பகுதியி லிருந்து வெளியேற்றப்பட்ட நீங்கள், நாட்டின் நாலாபக்கங்களிலும் சிதறுண்டு வாழ்கின்றமை மிகவும் மனவருத்தத் துக்குரியது.

இவ்வாறு வெளியேறிச் சென்ற மக்களில் கணிசமான தொகையினர் மீளத் தமது பிரதேசத்தில் வந்து மீள் குடியேறியபோதிலும், குறிப்பிட்ட தொகையினர் இடம்பெயர்ந்த இடங் களில் தமக்கென இடங்களைத் தயாரித்துக்கொண்டு அப்பகுதியிலே தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

ஒரே குடும்பம்போன்று இந்த எருக்கலம்பிட்டி முஸ்லிம் சகோத ரர்கள் வாழ்ந்த போதிலும், 1990 இல் ஏற்பட்ட குழப்ப நிலைமைகள் அவர்கள் சிதறுண்ட வாழ்க்கை அமைப்பை உருவாக்கி விட்டது.

எருக்கலம்பிட்டி வாழ் முஸ்லிம் மக்கள் பற்றி நான் ஓரளவு அறிவேன். இவர்கள் பகைமை எண்ணம் அற்ற வர்கள். அனைத்து மதத்தினரையும் சகோதரர்களாகக் கருதுபவர்கள். இவர்களின் வாழ்வு இன்றும் சிதறுண்டு கிடக்கின்றபோதும் இஸ்லாமிய மக்களின் ஐந்தாவது இறுதிக் கடமையான ஹஜ் விழா நிகழ்வின் எருக்கலம்பிட்டி முஸ்லிம் மக்கள் அனைவரும் வந்து இங்கு ஒன்றுகூடித் தமது அன்பையும் மகிழ் வையும் தெரிவித்துள்ளார்கள் இஸ்லாத் தின் அதியுயர் கடமைகளைச் சிறப் புற ஆற்ற வேண்டும் என்ற கொள் கையில் 2002 ஆம் ஆண்டில் ஆரம் பிக்கப்பட்ட இந்த நிகழ்வு இந்த வருடமும் சிறப்புறக் கொண்டாடப் படுவது மகிழ்ச்சிக்குரியது.

## வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு!

இந்து சமயத்தில் ஓர் இறையடியார் சரிதம் உண்டு. சிறுத்தொண்ட நாயனார் என்ற அடியவர் தினமும் தாம் உணவு உண்பதற்கு முன்பாக ஒரு சிவனடி யாரை அழைத்து வந்து உணவு அருந் தச் செய்து அவர் உணவு அருந்திய பின்பே தாம் உணவு அருந்தும் பழக் கத்தைக் கொண்டிருந்தார்.

ஒருநாள் இவர் எங்கு தேடியும் ஒரு சிவனடியாரைக் காண முடியவில்லை. அந்தத் தருணம் அருகேயுள்ள சிவன் கோவிலில் ஒரு சிவனடியாரைக் கண்டு அழைக்கின்றார். மாறு வேடத்திலுள்ள இறைவன் இவரைச் சோதிப்பதற்கு திருவுள்ளம் கொண்டு, தான் உணவு அருந்தவருவதாயின் நரபலி உணவு படைக்க வேண்டும். அதுவும் ஒரு பாலகனின் உடலைக் கறி சமைத்துத் தர வேண்டும் என வேண்டுகின்றார்.

ஒரு கணம் கலங்கிய சிறுத்தொண்ட நாயனார், பக்தி மேலீட்டால் வீட்டுக்கு ஓடிச்சென்று இந்த விடயத்தைத் தனது மனைவியிடம் கூறிச் சென்று பதிலுக்கு காத்திராமல் பாடசாலைக்கு ஓடிச் சென்று தமது சிறிய பாலகனை வீட்டுக்கு அழைத்து வந்து அவனை பன்னீரால் குளிக்கவார்த்து, ஆரத்தழுவி, அறுத்து கறி சமைத்து சிவனடியாருக்கு உணவு வழங்கியபோது இவர்களின் பக்தியைக் கண்ட இறைவன் மீண்டும் இவர்களின் பாலகனை உயிர்பெறச் செய்து ஒப் படைத்தார் எனசிறுத்தொண்டநாயனார் வரலாறு கூறுகின்றது.

இஸ்லாத்தின் ஐந்தாவது இறுதிக் கடமையும் இந்து சமயத்தின் சிறுத் தொண்டர் நாயனாரின் கதைக்கு ஒப் பானதாக இருக்கின்றது. ஈத்தலதா என் பது தியாகத் திருநாளாகும். நபிநாயகர் பட்டியலிலிருந்து இப்றாகிம் காஜரா உம்மா இந்த தம்பதிகள். இந்தத் தியாக எட்டாவது பிறையில் கனவு காண்கின் றனர். செயித்தானின் கனவால் ஏற் பட்ட தூண்டுதலில் நூறு ஒட்டகங் களை அறுத்துக் காணிக்கை கொடுக் கின்றனர்.

இவ்வாறு ஒன்பதாவது நாளும் இவ்வாறு கனவு காண்கின்றார்கள் இப் பொழுது இருநூறு ஒட்டகங்களை அறுத்து அல்லாவுக்கு காணிக்கை யாக்குகின்றனர். மீண்டும் பத்தாம்நாள் இவ்வாறான கனவு அல்லாவிடம் என்ன செய்யவேண்டும் என்று இரந்து கேட்கின்றனர்.

யாரை அவர்கள் மிகவும் நேசிக்கின்றார் களோ அவரை அறுத்து காணிக்கையாக் கும்படி அருள்வாக்கு கிடைக்கப் பெறு கின்றது. இந்தத் தம்பதினர் 96 வயதி னில் ஓர் அருமையான மகனைப் பெற்று அவரை இஸ்லாத்தின் வழி யில் வளர்த்து வருகின்றனர். ஆண்ட வனின் ஆணைக்குக் கட்டுப்பட்டு ஆறு வயது நிரம்பிய மகனை அறுக்கத் துணிகின்றனர்.

மகன் இஸ்மாயிலும் இதை அன் போடு ஏற்றுக்கொள்ளுகின்றான். தன்னை அறுக்கும்போது தந்தை கலங்கக் கூடாது என்பதற்காக அவரை கறுப்புத் துணியால் முகத்தை மூடிக் கொண்டு அல்லது தன்னை குப்புறப் படுக்க வைத்து அறுக்குமாறு கூறுகின்றான்.

துயரத்துடன் பிள்ளையை அறுக் கின்றார்கள். ஆனால், அவரை அறுக்க முடியவில்லை. இந்தக் கத்தியால் பாறாங்கற்களை வெட்டுகின்றார்கள் அவைகள் சுக்கு தூளாக நொறுங்கு கின்றன. ஆனால், பிள்ளையின் கழுத்தை அறுக்க முடியவில்லை. அப்பொழுது நபிகள் நாயகமிடமிருந்து ஒரு செய்தி கிடைக்கின்றது.

ஆட்டைப் பலி கொடுத்து இதை நிறைவேற்று என்று. இது நிறைவேற் றப்படுகிறது. இந்த நிகழ்வை நினைவு கூரும் வண்ணம்தான் தியாகத்திரு நாளில் ஒரு மிருகம் பலி கொடுக்கப் பட்டு, இதில் மூன்றில் ஒரு பங்கை ஏழை எளியவர்களுக்கும் அடுத்த ஒரு பங்கை உற்றார், உறவினர்களுக் கும் மற்றைய பங்கை குடும்பத்தாருக் கும் பங்கிடப்படுகின்றது.

இந்த இரண்டு சம்பவங்களும் இந்து சமயத்திலும் இஸ்லாம் சமயத் திலும் முழு நம்பிக்கையுடன் ஒழுகக் கூடியவர்களுக்கு ஏற்படக்கூடிய சோதனைகளையும் அவர்களின் மன உறுதியையும் கண்டு இறைவன் ஆட் கொள்ளும் தன்மையையும் எடுத்துக் கூறுகின்றன.

ஆகவே, எல்லா மதங்களும் அன்பை யும் இறைவனை நேசிக்கின்ற தன்மை யையும் பிறரிடம் அன்பைச் செலுத்து கின்ற மார்க்கத்தையுமே எடுத்துக் கூறுகின்றன. ஆகவே, தியாகமே மாக்க வழி. தியாகத்தையே இறைவன் விரும்பு கின்றான். இது எமது இரு மதங்களி லுமே வலியுறுத்தப்படுகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து எருக்கலம் பிட்டிக்குச் சென்றடைவதற்கு வெவ் வேறு மார்க்கங்கள் உள்ளன. பூநகரி – சங்குப்பிட்டி ஒரு பாதை. வவுனியா செட்டிகுளம் ஊடாக இன்னொரு பாதை. மதவாச்சி – முருங்கன் செட்டி குளம் ரயில் பாதை. இதுபோன்றுதான் எமது சமய வழிகாட்டல் பாதைகள். இந்து சமயத்துக்கு ஒரு பாதை. இஸ் லாமியத்துக்கு இன்னொரு பாதை. கிறிஸ் தவத்துக்கு மற்றொரு பாதை. ஆனால், தொடக்கமும் முடிவுமே நிரந்தரப் பாதை. செல்லுகின்ற பாதைகள் மட்டுமே வெவ்வேறானவை.



இந்த நல்ல நிகழ்வில் கலந்து கொண்டு ஒரு புதிய உணர்வை பெற்றுள் ளேன். இறைவனின் படைப்பிலே ஆற றிவு கொண்டு படைக்கப்பட்ட மனித குலம் மதத்தின் பேரால் அடிபடபட்டு சாவதும் பிரிந்து நிற்பதும் எமது அறி யாமையாகும்.

இதை அனைத்து மதங்களும் மதத் தலைவர்களும், இடித்து உரைக் கின்றபோதும் அதை நாம் கேட்பதாக இல்லை. இலங்கையில் வாழ்கின்ற மூவின மக்களும் பகைமைகளை மறந்து சகோதரர்களாக வாழத் தலைப் பட்டால், இந்த நாட்டுக்கு இணை இந்த நாடுதான் மட்டுமே இருக்க முடியும். எனவே காலம் கடந்த நிலையில் எமது மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒருமித்து இந்த நாட்டை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்ல முயற்சிக்க வேண்டும். (112)

# எந்தவொரு வெளிநாட்டின் முதலீட்டாளர்களும் இலங்கையில் தாராளமாக முதலீடு செய்யலாம்!

கொழும்பு, செப். 08

எந்தவொரு நாட்டின் வெளிநாட்டு முதலீட்டாளர்களும் இலங்கையில் தாராளமாக முதலீடு செய்யலாம்.

ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து தற்போது ஜி. எஸ். பி. பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்குக் கிடைக்கிறது.

இந்தியாவுடனான எட்கா உடன் படிக்கை மற்றும் சீனா, சிங்கப்பூருடனான வர்த்தக உடன்படிக்கைகள் அடுத்த வருடம் கைச்சாத்திடப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சார்க் வலய நாடுகளின் முதலீட்டு மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதியாக கலந்து உரையாற்றுகையிலேயே பிரதமர் ரணில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தெற்காசிய பிராந்தியத்திலுள்ள நாடுகளை ஒன்றிணைக்கும் பொறுப்பு வர்த்தக சமூகத்தினருக்குரியதாகும். சுதந்திர தெற்காசியா என்ற தொனிப்பொருள் நடைமுறை சாத்தியமாவதற்கு சுதந்திரமாக திறந்த வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

உலகிலேயே தெற்காசியா மிக வேகமாக வளர்ச்சியடைந்து வரும் பிராந்தியமாகும். இதே வேகத்தில் செல்லுமிடத்து இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகள் உலகின் முதல் 32 நாடுகளுக்குள் அங்கம் வகிப்பதற்கான சாத்தியம் உண்டு.

இதற்காக ஒவ்வோர் அரசும் தமது நாட்டின் வணிகத் துறையை மேம்படுத்துவதற்கான அடித்தளத்தை உருவாக்க வேண்டும். நாடுகளுக்கிடையே வரி அறவிடப்பட்ட போதிலும் கூட்டாக ஒன்றிணைந்து செயற்படும் தன்மை மிகவும் அவசியமாகும்.

## பிரதமர் ரணில் தெரிவிப்பு!



இதன் காரணமாகவே வணிக நடவடிக்கைகள் மேலும் அபிவிருத்தியடையும். இதற்காக வர்த்தக சம்மேளனங்கள் பிராந்தியங்களுக்கிடையே ஒன்றிணைப்பை ஏற்படுத்தும் வகையிலான அடித்தளத்தை உருவாக்க வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரை 2015 ஆம் ஆண்டு ஜனவரியில் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசு அதற்கான அடித்தளத்தை உருவாக்கியுள்ளது.

அதனைத்தொடர்ந்து கடந்த 2015 செப்ரெம்பரில் நாட்டிலுள்ள பிரதான இரு கட்சிகள் ஒன்று சேர்ந்து தேசிய அரசை அமைத்தன. இருவேறு கட்சிகளாக நாம் தனித்தனியே தேர்தலில் போட்டியிட்டாலும் எமது பொருளாதாரக் கொள்கை ஒன்றாகவே உள்ளது.

நாம் எவ்வகையில் அரசியல் நடத்தினாலும் நாட்டின் தேசிய அரசை ஒருபோதும் மீறப்போவதில்லை. அனைத்து விடயங்களையும் சட்ட வரையறைக் குட்பட்டதாகவே நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

அத்துடன் வணிகரீதியாகக் கூட்டாகச் செயற்படுவதில் நாம் அதிக அக்கறை செலுத்தியுள்ளோம். இதன் முதற்படியாக கொழும்பு துறைமுகம், அம்பாந்தோட்டைதுறைமுகம் மற்றும் திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவுள்ளோம்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தைப் போன்றே மத்தள விமான நிலையத்தையும் நாம் அபிவிருத்தி செய்யத்திட்டமிட்டுள்ளோம். தெற்கு அதிவேக நெடுஞ்சாலையைப் போன்றே கண்டிக்கான அதிவேக நெடுஞ்சாலையும் விரைவில் அபிவிருத்தி செய்யப்படும்.

அத்துடன், தொழில்நுட்பத்தை அதிகரிக்கும் நடவடிக்கைகளில் களமிறங்கியுள்ளோம். அனைத்து இடங்களுக்கும் வை-பை இணைப்புக்கள் இதன்கீழ் பெற்றுக் கொடுக்கப்படும்.

கண்டியை சுற்றுலா, தொழில்நுட்பம், கல்வி மற்றும் விஞ்ஞானத்துக்கான மையமாக அபிவிருத்தி செய்யவுள்ளோம். கொழும்பை கைத்தொழில் மற்றும் சுற்றுலா மையமாக விருத்தி செய்வோம்.

அத்துடன், கொழும்பில் பெருநகர அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. துறைமுக நகரம் நிதி நகரமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. களுத்துறையில் கைத்தொழில் பேட்டை அமைக்கப்பட்டு வருகிறது. தென் மாகாணத்திலும் கைத்தொழில் பேட்டைகள் நிறுவப்பட்டு வருகின்றன. கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா, விவசாயம் என்பனவும் வடக்கில் நீர் சம்பந்தப்பட்ட பொருளாதாரத்தை மேம்படுத்தவும் அரசு திட்டமிட்டுள்ளது.

ஆனால், இவை எவ்வளவு வேகமாக முன்னெடுத்துச் செல்லப்படும் எனக் கேட்டால், அவை வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வருகையின் அடிப்படையிலேயே தங்கியுள்ளது என நான் பதில் கூறுவேன்.

அதனால், எந்தவொரு நாட்டின் வெளிநாட்டு முதலீட்டாளர்களும் இலங்கையில் தாராளமாக முதலீடு செய்யலாம். ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து தற்போது ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்கு கிடைக்கிறது.

இந்தியாவுடனான எட்கா உடன்படிக்கை மற்றும் சீனா, சிங்கப்பூருடனான வர்த்தக உடன்படிக்கைகள் அடுத்த வருடம் கைச்சாத்திடப்படும். அதற்கு மேலதிகமாக தெற்காசிய நாடுகளுடன் பல சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்படவுள்ளன. இந்து சமுத்திர நாடுகளுடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான அர்ப்பணிப்பை நாம் கொண்டுள்ளோம்.

எனவே, திறந்த பொருளாதாரத்தை சுதந்திரமாக முன்னெடுப்பதற்கு இதுவே சரியான தருணம் என்பதால் இலங்கை அதற்கான அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளது. ஏனைய நாடுகளைப் போன்று அல்லாமல் இலங்கை நீண்ட கால யுத்தத்துக்கு முகம் கொடுத்ததனால் நாம் எமக்கான இடத்தைத்தக்கவைத்துக் கொள்ள பெரிய முயற்சியை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

அத்துடன், எமது இந்த முயற்சி வெற்றியளிக்குமிடத்து எமது மக்களுக்கு சிறந்த எதிர்காலத்தை பெற்றுக் கொடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# 200 ஆவது நாளைத் தாண்டியும்...! காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டம்

கொழும்பு, செப். 08

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை மீட்டுத்தருமாறு வலியுறுத்தித் தமிழர் தாயகப் பகுதிகளில் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், கிளிநொச்சியில் இடம்பெற்றுவரும் போராட்டம் நேற்று 200 ஆவது நாளை எட்டியது.

கிளிநொச்சியில் கடந்த நாள்களில் நிலவிய கடுமையான வெயிலையும் பொருட் படுத்தாது போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், கொட்டும் மழையிலும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடி அலைகின்றனர்.

பல்வேறு சந்தர்ப்பங்களின் போதும் காணாமல்போகச் செய்யப்பட்டுள்ள தமது உறவுகளை மீட்கும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், இயற்கையின் சீற்றத்தையும் பொருட்படுத் தாது நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.



கிளிநொச்சி நகர மத்தியில் அமைந்துள்ள கந்தசுவாமி ஆலய முன்றிலில் அமைக்கப்பட்ட தற்காலிக தறப்பாள் கொட்டகையில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த மக்கள், தற்போது ஆலயத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள சிறிய அறையொன்றில் தங்கியிருந்து தமது 200 ஆவது போராட்டத்தை மேற்கொண்டனர்.

போராட்டம் ஆரம்பமான நாள் முதல் நேற்று வரை அரசியல்வாதிகள், தொண்டு நிறுவனங்கள், சர்வமதத் தலைவர்கள், ஜனாதிபதி உட்பட சர்வதேச உயர் அதிகாரிகள் வரை அனைவரும் வழங்கிய காலக்கெடு மற்றும் வாக்குறுதிகள் காலங்கடந்துள்ள நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோரைக் கண்டறியும் போராட்டம் தொடர்கின்றது என மக்கள் தெரிவிக்கின்றனர். (க)

# ப.நோ.கூ.சங்க பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், செப்.08

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் தலைவர் ஜெ.சுஜீந்திரன் தலைமையில் இடம்பெறும்.

இந்தக் கூட்டத்தில் அனைத்து பொதுச்சபை உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு உப தலைவர் ச.சத்தியதாசன் கேட்டுள்ளார். (இ)

# எடப்பாடி கூட்டத்தில் 90 எம்.எல்.ஏக்கள் பொதுக்குழு கூட்டம் சட்டப்படி செல்லாது

## புகழேந்தி பேட்டி

சென்னை.ஒக.8

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, தலைமைக் கழகத்தில் கூட்டிய எம்.எல். ஏக்கள் கூட்டத்தில் 90 எம்.எல். ஏக்கள் மட்டுமே கலந்து கொண்டனர் என்று தினகரன் ஆதரவாளர் புகழேந்தி தெரிவித்துள் ளார்.

டி.டி.வி.தினகரன் ஆதரவாளரான புகழேந்தி கூறியவை வருமாறு:-

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, தலைமைக் கழகத்தில் கூட்டிய எம்.எல். ஏக்கள் கூட்டத்தில் 90 எம்.எல். ஏக்கள் மட்டுமே கலந்து கொண்டனர்.

ஆனால் அமைச்சர் ஜெயக்குமார் எல்லோரையும் ஏமாற்ற 111 பேர் கலந்து கொண்டனர் எனக் கூறி இருக்கின்றார். இந்தக் கூட்டத்தில் கையெழுத்திட்ட எம்.எல். ஏக்கள் பட்டியலை அவர் வெளியிடத் தயாரா?

சட்டசபையில் எடப்பாடி பழனிச்சாமி அரசுக்கு எதிராக வாக்களித்த ஓ.பி.எஸ். ஆதரவு எம்.எல்.ஏ.க்களைத் தகுதி நீக்கம் செய்யும்படி வழக்குத் தொடர உள்ளோம்.

எனவே, விரைவில் 11 எம்.எல். ஏக்கள் பதவி இழந்து விடுவார்கள்.

தற்போது பெரும்பான்மை இழந்த அரசாக எடப்பாடி பழனிச்சாமி அரசு உள்ளது.



எனவே அம்மா ஆட்சி நீடிக்க வேண்டுமானால் டிடி. வி.தினகரனைச் சந்தித்து அவர் பதவி விலகல் கடிதத்தைக் கொடுக்க வேண் டும்.

அப்போதுதான் இந்த அரசாங்கம் காப்பாற்றப்படும்.

அ.திமு.க. பொதுக் குழுவுக்கு ஆள்களை திரட்ட மாவட்டம் தோறும் அமைச்சர்கள் கட்சிக்காரர்களுக்கு பல்வேறு வசதிகளைச் செய்து தருவோம் என பொய் வாக்குறுதிகளை அளித்து வருகிறார்கள்.

பொதுக்குழு உறுப்பினர்களுக்கு அனுப்பப்படும் கடிதம் கூட யாருடைய கையெழுத்தும் இன்றி மொட்டைக் கடிதமாக உள்ளது. அ.தி.மு.க. முகவரி இல்லாத கட்சியா? என்று தொண்டர்கள் மனம் குமுறுகிறார்கள்.

இவர்கள் கூட்டும் பொதுக்குழு சட்டப்படி செல்லாது என்பதுதான் உண்மை.

இவ்வாறு அவர் கூறினார்.

## மும்பை குண்டு வெடிப்பு வழக்கில் சூத்திரதாரிகளுக்கு ஆயுள் தண்டனை



மும்பை.செப்.8

1993ஆம் ஆண்டு நடந்த மும்பை குண்டு வெடிப்பு தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் அபுசலீம், கரிமுல்லாகான் ஆகியோருக்கு ஆயுள் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

1993ஆம் ஆண்டு மும்பையில் தொடர் குண்டுவெடிப்புசம்பவங்கள் நடந்தன. இதில் 257 பேர் பலியானார்கள். 713 பேர் காயம் அடைந்தனர்.

நிழல் உலக தாதா ராவூத் இப்ராகீம் மேற்பார்வையில் இந்தக் குண்டு வெடிப்பு சம்பவம் நிகழ்ந்தது. இந்தக் குண்டு வெடிப்பு வழக்கு மும்பை சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இந்த வழக்கில் தாவூத் இப்ராகீம் கூட்டாளியான அபுசலீம், பெரோஸ் அப்துல் ரஷீத் கான், தாகீர் மெர்ச்சன்ட், கரிமுல்லாகான், ரியாஸ் சித்திக் ஆகியோரை குற்றவாளி என்று நீதிமன்றம் ஏற்கனவே அறிவித்தது. இவர்களுக்கான தண்டனை விவரம் நேற்று அறிவிக்கப்பட்டது.

அப்போது அபுசலீம், கரி முல்லாகான் ஆகியோருக்கு ஆயுள் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பு அளித்தார். அபுசலீமுக்கு 2 லட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

மற்றொரு குற்றவாளிகளான தாகீர் மெர்ச்சன்ட், பெரோஸ் இற்கு தூக்குத் தண்டனை விதிக்கப் பட்டது.

## சுட்டுக்கொல்லப்பட்ட பத்திரிகையாளர் அரச மரியாதையுடன் நல்லடக்கம்





பெங்களூர் ராஜ ராஜேஸ்வரி நகரில் வசித்து வந்த கவுரி லங்கேஷ் என்ற பத்தி ரிகையாளர் கடந்த செவ்வாய்க் கிழமை மர்மநபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவர் கொல்லப்பட்ட சம்பவம் கர்நாடகம் மட்டுமன்றி நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கவுரிலங்கேஷ் உடல் நேற்று முன்தினம் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அவர் கண் தானம் செய்திருந்ததால் முன்னதாக வைத்தியர்கள் அவரது கண்களை எடுத்துச் சென்றனர். அமைச்சர்கள் நடிகர் பிரகாஷ் ராஜ் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் எழுத்தாளர்கள் கன்னட திரையுலகினர் ஆகியோரும் அஞ்சலி செலுத்தினர்.

சாம்ராஜ்பேட்டையில் உள்ள மயானத்தில் துப்பாக்கி குண்டுகள் முழங்க கவுரி லங்கேசின் உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது. கவுரி லங்கேஷ் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து பெங்களூருவில் பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள்.

## டில்லியில் தமிழக விவசாயிகள் ஒப்பாரி போராட்டம்

டில்லி.செப்.8

இந்தியாவின் தலைநகர் டில்லியிலுள்ள ஜந்தர்மந்திரில் தொடர்போராட்டம் நடத்தி வரும் தமிழக விவசாயிகளின் 53 ஆம் நாளான நேற்று முன்தினம் விவசாயி ஒருவரை பிணத்தைப் போல படுக்க வைத்து, ஒப்பாரி போராட்டம் நடத்தினர்.

விவசாய கடன்களை ரத்து செய்வது, நதிகளை இணைப்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தமிழக விவசாயிகள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.



அழிந்த பயிர்களுக்கு நஷ்டஈடு வழங்காதது, வரட்சி நிவாரணம் வழங்காதது, விவசாய விளைபொருள்களுக்கு லாபகரமான விலை நிர்ணயிக்காதது, இந்தியாவிலுள்ள நதிகளை இணைக்காமல் இருப்பது, காவிரியில் நீர்வழங்காமல் இருப்பது, உச்சநீதிமன்ற உத்தரவுப்படி காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காமல் மெத்தனப்போக்கை மத்திய அரசு கையாண்டு வருகின்றமை போன்ற விடயங்களை முன்வைத்துப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இறந்தது போன்று கிடத்தப்பட்ட விவசாயி ஒருவரை சுற்றி அமர்ந்து ஒப்பாரி வைத்து எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இந்தப் போராட்டத்தைத் தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க மாநில தலைவர் அய்யாக்கண்ணு ஒருங்கிணைத்து நடத்தி வருகிறார்.

## மும்பை கட்டடத்தில் தீ விபத்து; 5 பேர் சாவு



மும்பை.செப்.8

மராட்டிய மாநிலம் மும்பையில் புதிதாகக் கட்டப்பட்ட கட்டடத்தில் எரிவாயு சிலிண்டர் வெடித்து ஏற்பட்ட தீ விபத்தில் 5 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

மராட்டிய மாநிலம் மும்பையில் ஜுஹு பகுதியில் உள்ள கிஷோர் குமார் கார்டன் பகுதியில் புதிதாக அடுக்கு மாடிக் குடியிருப்பின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் இரவு, அங்கு வெல்டிங் பணிக்காக வைத்திருந்த எரிவாயு சிலிண்டர் திடீரென வெடித்துச் சிதறியது.

இதனால் கட்டடத்தில் தீ பரவியது. இந்தக் கோர விபத்தில் கட்டுமானப் பணியிலிருந்த 5 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

8பேர்காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்துக் குறித்து வழக்கு பதிவு செய்துள்ள பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கரீபியன் தீவுகளை தாக்கியது ‘இர்மா’!






கரீபியன் தீவுகளை மிகவும் கடுமையான வேகத்தில் தாக்கியுள்ள இர்மா சூறாவளியின் பாதிப்பால் 7 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. கரீபியன் தீவுகள் எங்கும் மிகப்பரவலான சேதங்களை இர்மா சூறாவளி உருவாக்கியுள்ளது.

அட்லாண்டிக் பெருங்கடலில் உருவாகியுள்ள மிகவும் கடுமையான இர்மா சூறாவளி, முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் சேதங்களை உருவாக்கி வருகிறது.

மிகவும் சிறிய அளவிலான பார்புடா தீவுகள் இந்த சூறாவளியால் வாழ்வதற்கு அரிதான இடமாக மாறிவருகின்றனர் எனக் கூறப் படுகிறது. கடுமையான பாதிப்படைந்துள்ள பிரெஞ்சு பிராந்தியமான செயிண்ட் மார்டின் தீவு கிட்டதட்ட முற்றிலுமாக அழிந்த நிலையில் இருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள அழிவுகளுக்கு பிறகு இறப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த வாரத்தில் அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் கன மழையுடன் ஹார்வே புயல் புரட்டி எடுத்து வரும் நிலையில், ஹூஸ்டன் நகரையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள வெள்ளத்தில் சிக்கிய சுமார் 2 ஆயிரம் பேர் மீட் கப்பட்டுள்ளனர்.

## பாகிஸ்தானுக்கு சீனா அழைப்பு



பீஜிங்.செப்.8

பிரிக்ஸ் மாநாட்டில் பயங்கரவாதத்துக்கு எதிராக எடுக்கப்பட்ட முடிவிற்கு பின், பாகிஸ்தானை சீனா அழைத்து பேசவுள்ளது.

பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் முகம்மது ஆசிப், செப்ரெம்பர்மாதம்8ஆம்திகதி சீனா செல்லவுள்ளார். அவர், சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீ யையும்,இதரதலைவர்களையும் சந்தித்துப் பேசுவார், என சீன அரசின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

பிரிக்ஸ் மாநாட்டில், பாகிஸ்தானின் பயங்கரவாதத்துக்கு எதிராக முடிவு எடுக்கப்பட்டது. இதை சீன அரசியல் பிரமுகர்கள் எதிர்க்கின்றனர். இருநாட்டு உறவு அதனால் கெடும் என்பது அவர்கள் கருத்து. இந்த சூழ்நிலையில் பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சரின் சீன பயணம் முக்கியத்துவம் பெறுகிறது. (ப)

## ட்ரம்பின் முடிவை எதிர்க்கும் ஒபாமா



வொஷிங்டன்.செப்.8

அமெரிக்காவுக்குள் சிறுவயதில் சட்ட விரோதமாகக் குடியேறியவர்களுக்கான வேலை வாய்ப்பை பறிக்க ட்ரம்ப் முடிவெடுத்துள்ளமை கொடூரமான நடவடிக்கை என முன்னாள் அதிபர் ஒபாமா விமர்சித்துள்ளார்.

அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமா ஆட்சிக் காலத்தின்போது அமெரிக்க குடியுரிமைச் சட்டங்களில் பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதன் ஒரு பகுதியாக, சிறுவயதிலேயே அமெரிக்காவுக்குள் சட்ட விரோதமாகக் குடியேறுபவர்கள், வளர்ந்த பின்னர் அமெரிக்க நிறுவனங்களில்பணிபுரிவதற்கான அனுமதி அளிக்கப் பட்டது.

‘குழந்தை குடியேற்ற வாசிகளுக்கான நிறுத்தி வைக்கப்பட்ட நடவடிக்கை’ (டி.ஏ.சி.ஏ.) என்று அழைக்கப்படும் இந்தச் சட்டத்தை ரத்து செய்வதற்கான முடிவை தற்போதைய அதிபர் ரொனால்ட் ட்ரம்ப் எடுத்துள்ளார் எனத் தெரிகிறது. விரைவில் இதனை ட்ரம்ப் பரிசீலிக்க இருக்கின்றார் என வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பை யடுத்து ஆயிரக்கணக்கானோர் வெள்ளை மாளிகையின் முன்னா் குவிந்து ட்ரம்புக்கு எதிராகக் கண்டனக் குரல்களை எழுப்பினர்.

## சார்ஜாவில் வசிக்கும் இந்திய சிறுவன் விமானத்தை இயக்கி உலக சாதனை!



சார்ஜா.செப்.08

சார்ஜாவில் வசிக்கும் 14 வயதான இந்திய சிறுவன் மன்சூர் அனீஸ் விமானத்தை இயக்கி உலக சாதனை படைத்துள்ளார்.

இந்தியாவைச் சேர்ந்த சிறுவன் மன்சூர் அனீஸ் (வயது 14). இவன்சார்ஜாவில்குடும்பத்துடன் வசித்து வருகிறான். மன்சூர் அனீசுக்கு சிறு வயது முதலே விமானத்தை இயக்குவதில் ஆர்வம் இருந்துள்ளது. சிறுவனின் ஆர்வத்தைப் பார்த்த அவனது உறவினரான இந்திய விமானி ஒருவர், அவனுக்கு விமான தொழில் நுட்பம் குறித்து விளக்கிக் கூறினார்.

அவர், மன்சூர் அனீஸுக்கு 7 வயதாக இருக்கும்போது விமானிகள் பயிற்சி பெறும் ‘சுமூலேட்டர்’ எனப்படும் செயற்கை விமான அமைப்பு மூலம் விமானம் இயக்குவது குறித்து பயிற்சி அளித்தார். அதனைத்தொடர்ந்து சிறுவன் கனடாவில் உள்ள விமான பயிற்சி அக்கடமியில் 25 மணி நேரம் பயிற்சி பெற்றான். பின்னர், கனடாவில் தன்ணந்தனியாக விமானத்தை இயக்கி சாதனை படைத்துள்ளான்.

## ஆட்டிறைச்சி விளம்பரத்தில் பிள்ளையார்!



ஆட்டிறைச்சிக்கான ஆஸ்திரேலிய விளம்பரம் ஒன்றில் அதை உண்ணும் ஒருவராக இந்துக் கடவுளான பிள்ளையார் சித்திரிக்கப்பட்டுள்ளார்.

இந்த விவகாரம் இந்துக்களின் பலத்த விமர்சனத்திற்குத் தற்போது உள்ளாகியிருக்கின்றது. இந்த விளம்பரத்தை உடனடியாகத் தடை செய்யுமாறு ஆஸ்திரேலிய இந்து சபை முறைப்பாடு செய்துள்ளது.

விளம்பரத்தில் அனைத்துக் கடவுள்களும் ஆட்டிறைச்சியை ருசித்து உண்பதாகக் காட்டப்பட்டுள்ளது.

எல்லோராலும் உண்ணக்கூடியது ஆட்டிறைச்சி என்ற தமது விளம்பர மையப் பொருளை முன்னிலைப்படுத்தும் நோக்கில் இது படமாக்கப்பட்டுள்ளது. இதில் பிள்ளையாருடன் ஜேசு பிரான்,புத்தர், ஜீசஸ் என பல கடவுளரும் அடங்குகிறார்கள் என விளம்பர நிறுவனம் தெரிவித்துள்ளது

ஆஸ்திரேலியா விளம்பரசபைக்கு இதுவரை தமக்கு 30 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)



# சுமதிபால மீதான குற்றச்சாட்டை நிராகரிக்கும் இலங்கை கிரிக்கெட்

இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் திலங்க சுமதிபால சூதாட்ட தொழிலில் ஈடுபட்டு வருகிறார் எனத் தொலைக்காட்சி, வலைத்தளங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் பரப்பப்படும் செய்திகள் மற்றும் பிரசாரங்களை இலங்கை கிரிக்கெட் சபை கடுமையாக நிராகரித்துள்ளது. இந்தச் செய்திகள் அவதூறு மற்றும் தீய எண்ணம் கொண்டு பரப்பப்படுபவை என்று இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டிருக்கும் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணி நெருக்கடியைச் சந்தித்திருக்கும் சூழலில் அதனைச் சாதகமாக வைத்து சிலர் இலங்கை கிரிக் கெட் சபை மற்றும் அதன் தலைவரை இலக்கு வைத்து பிரசாரங்களை முன்னெடுக்க முயற்சிக்கின்றமை தெளிவாகத் தெரிகிறது.

இலங்கை அணியை மீண்டும் கட்டி எழுப்புவதற்கான சாதகமான சூழலை ஏற்படுத்துவதற்கு மாறாக அதனை வைத்துப் பாதகமான செய்திகளைப் புனைவதில் ஒருசில பிரதான ஊடகங்கள் முயற்சிக்கின்றன. இதனைச் சமூக ஊடகங்களில் பரவலாகப் பார்க்க முடிகிறது.

இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவரை நீண்ட காலமாக இலக்கு வைத்து வரும் தரப்புகளுக்கு இந்த வாய்ப்பு பொன்னான தருணமாகப் பார்க்க முடிகிறது. அவ்வாறானவர்கள் பேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூகவலைத் தளங்களில் புதிய குற்றச்சாட்டுகளை பதிவேற்றுகின்றனர். அதற்கு ஏற்ப, தொலைக்காட்சி, பத்திரிகைகள் போன்ற பிரதான ஊடகங்களும் குற்றச்சாட்டுகளைச் சுமந்த செய்திகளை வெளியிடுவதில் விருப்பம் காட்டுவதைக் காணமுடிகிறது.

இதில் கடந்த செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி சிலோன் டுடே பத்திரிகையிலும் செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி சன்டே டைம்ஸ் பத்திரிகையிலும் வெளியான கட்டுரைகளுக்கு இலங்கை கிரிக்கெட் சபை பதிலளித்துள்ளது.

இந்த இரு பத்திரிகைகளிலும் முறையே சூதாட்ட நிறுவனங்களுடனான தொடர்பை சுமதிபால ஒப்புக்கொண்டார் மற்றும் இது இலங்கை கிரிக்கெட் சபையில் சுமதிபாலவின் இன்னிங்ஸ் முடிவா என்ற தலைப்புகளில் செய்திகள் வெளியாகி இருந்தன.

இந்தக் கட்டுரைகளில் திலங்க சுமதிபால கூறினார் எனமேற்கோளிடப்பட்ட கூற்று ஒன்றிலேயே அவர் சூதாட்ட நிறுவனங்களுடன் தொடர்பு இருக்கிறது என ஒப்புக் கொண்டார் என கூறப்பட்டுள்ளது.

ஆனால் அந்தச் செய்தி முற்றாகத் திரிபு படுத்தப்பட்ட ஒன்று என்பதை இலங்கைக் கிரிக்கெட் சபை விளக்கியுள்ளது.

முழுமையான நீதிமன்ற அறிக்கையில் கூறப்பட்டிருக்கும் விடயங்களில் உள்ள உண்மையான தகவல் மறைக்கப்பட்டு நியாயமற்ற முறையில் இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்பட்டுள்ளது. இது பொது மக்களிடையே மாறுபட்ட கருத்தொன்றை ஏற்படுத்தும் முயற்சியாகும் என்று இலங்கை கிரிக்கெட் சபையின் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

உண்மையில் அந்த வாக்கு மூலத்தில் திலங்க சுமதிபால கூறும்போது, தாமும் தமது குடும்பத்தினரும் சூதாட்ட தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர் என பொதுவான கருத்தொன்று மக்களிடம் இருக்கிறது எனவும், தாம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கூறப்படும் எந்த ஒரு சூதாட்ட வர்த்தகத் திலும் தொடர்புபட்டிருக்க வில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்தக் கூற்றுக்கூட அண்மையில் வெளியானது போன்று கட்டுரையில் கூறப்பட்டிருக்கிறது. உண்மையில் அது 2011ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் நடந்த ஒரு வழக்கில் வாக்குமூலம் அளிக்கும்போது குறிப்பிடப்பட்டதாகும். அதாவது, சுமதிபால 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை கிரிக்கெட் சபையின் தலைமை பதவியை ஏற்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னர் கூறிய ஒரு கூற்றாகும்.

திலங்க சுமதிபாலவின் பெயருக்கு கேடு விளை விக்கும் வகையில் நீக்கப்பட்ட விளையாட்டு சட்டங்கள் மற்றும் ஒழுங்குகளை அடிப்படையாகக் கொண்டு உண்மையான தகவல்களை மறைத்து, மக்கள் மனதில் இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் மீது தவறான மற்றும் மோசமான எண்ணத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே இந்தக் கட்டுரை அமைந்துள்ளது என்று இலங்கை கிரிக்கெட் சபை கூறியது.

எவ்வாறாயினும் 2015ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைமைப் பதவிக்காக திலங்க சுமதிபால வேட்பு மனு தாக்கல் செய்திருந்தார். எனவே, அன்றைய திகதியில் அவர் குறித்த கட்டுரைகள் அடிப்படையாகக் கொண்டிருக்கும் ஒழுங்கு விதிகளின் அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்திருந்தார் என்பதுவே உண்மை. அதில் அவர் எந்த ஒரு தகுதியின்மைக்கும் முகம் கொடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இது தவிர, சர்வதேச கிரிக்கெட் சபை (ஐஇஇ) திலங்க சுமதிபாலவை அதன் இயக்குநராகவும் ஏற்றுள்ளது. அவ்வாறு உயர் பதவி வழங்கும் முன் அவர் அனைத்து ஒழுக்காற்று விதிகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதை சர்வதேச கிரிக்கெட் சபையின் நிறைவேற்றுக் குழு உறுதி செய்திருக்கிறது. அது பற்றி நெறிமுறை அதிகாரிகளால் முறையான விசாரணைகள் நடத்தப்பட்டு அவரது தகுதி உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி, விளையாட்டுத் துறை அமைச்சு மற்றும் சர்வதேச கிரிக்கெட் சபை மூலம் மேற்கொள்ளப்பட்ட முறையான விசாரணைகளின் பின்னர் அவர் சூதாட்ட தொழிலில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புபட்டவர் இல்லை என்பது எந்தச் சந்தேகமும் இன்றி உறுதியாகிறது.

இந்நிலையில், திலங்க சுமதிபால தொடர்பில் சர்வதேச கிரிக்கெட் சபை ஒரு முழுமையான விசாரணையை நடத்தி அவரது தகுதியை உறுதி செய்திருக்கும் நிலையில் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை என்பதே உண்மை.

இவ்வாறான குழப்பம் விளைவிக்கும் செயல்கள் திலங்க சுமதிபால என்ற தனி ஒருவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் என்பதைக் கடந்து இலங்கை கிரிக்கெட் விளையாட்டில் பாதிப்புகள் செலுத்தக் கூடியதாக இருக்கும் என்று இலங்கை கிரிக்கெட் சபை சுட்டிக்காட்டுகிறது. இவ்வாறான அனுமானங்களை வெளியிடுவது, ஆதாரமற்ற செய்திகளை வெளியிடுவது போன்றவற்றைத் தவிர்த்துக் கொள்ளும்படியும் இலங்கை கிரிக்கெட் சபை கேட்டுக்கொண்டுள்ளது.

# தங்கப்பதக்கத்துக்கான மாபெரும் மாட்டு வண்டி சவாரி

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் ஆண்டு தோறும் நடத்தப்படும் மாட்டுவண்டி சவாரி போட்டி களின் வரிசையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 1.30 மணி தொடக்கம் தங்கப்பதக்கத்திற்கான 4ஆவது மாபெரும் சவாரிப்பந்தயம் வட்டுக்கோட்டை கொத்துத் துறை சவாரி விடந்தையில் மிக கோலாகலமாக இடம்பெற உள்ளது.

அ,ஆ,இ,ஈ என நான்கு பிரிவுகளிலும் முதலிடம் பெறும் ஒவ்வொரு வெற்றியாளர்களுக்கும் முதற்பரிசாக தங்கபதக்கமும், மற்றும் ஏனைய வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.



# எருக்கலம்பிட்டி உதைபந்தாட்டப் போட்டி முடிசூடியது ஈ.வை.எம்.ஏ.கழகம்









மன்னாரில் இடம் பெயர்ந்த மற்றும் மீள் குடியேறி வாழும் எருக்கலம்பிட்டி முஸ்லிம் மக்கள் வருடந்தோறும் ஹஜ்; பெருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட் உதைபந்தாட்டப்போட்டியில் ஈ.வை.எம்.ஏ. விளையாட்டுக்கழகம் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

மூன்று தினங்கள் நடத்தப்பட்ட விளையாட்டு நிகழ்வுகளில் முப்பது உதைபந்தாட்டக் கழகங்கள் பங்குபற்றியதுடன் இறுதி நாள் அன்று புத்தளம் நாகவில்ல மன். எருக்கலம்பிட்டி ஈ.வை. எம்.ஏ விளையாட்டு கழகத்திற்கும் ஈ.பி.யுத் கழகத்தக்கும் இடையே இறுதி உதைபந்தாட்டப் போட்டிகள்இடம்பெற்றது.

இதில் ஈ.வை.எம்.ஏ விளையாட்டு கழகம் 2:1 என்ற கோல் வித்தியாசத்தில் ஈ.பி.யுத் கழகத்தை வெற்றியீட்டியது.

இந்தப் போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாக சுபாஸ் (மன்.புனித சவேரியார் தேசிய பாடசாலை ஆசிரியர்), நிசாந்தன், காந்தன் (காவல் துறை) ஆகியோர் கடமை புரிந்தனர்.

இந்தப் போட்டி விழாவில் வட மாகாண முதலமைச்சர்சீ.வி.விக்னேஸ்வரன், வட மாகாண சபை உறுப்பினர்எச்.எம்.றயீஸ், மன்னார் நகர் பிரதேச செயலாளர் எம்.பரமதாஸ், மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.ஏ.துரம், செட்டிக்குளம் மக்கள் வங்கி முகாமையாளர் அப்துல் ஹக் முகமட் ஆரூஸ், வட மேல் மாகாண சபை உறுப்பினர் ஆகியோரும் கலந்துகொண்டு வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களை வழங்கினர்.

(112)

# கோஹ்லியின் அதிரடியோடு இலங்கையை ரி-20 போட்டியிலும் வீழ்த்திய இந்தியா




இந்தியா மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையில் நடைபெற்று முடிந்திருக்கும் ரி-20 போட்டியில், இந்திய அணி இலங்கையை 7 விக்கெட்டுகளால் வீழ்த்தி டெஸ்ட், ஒருநாள் தொடர்களுடன் ரி-20 போட்டியையும் கைப்பற்றியுள்ளது.

கொழும்பு ஆர். பிரேமதாச சர்வதேச மைதானத்தில் தொடங்கிய இந்த ஆட்டம் மைதான ஈரலிப்பு காரணமாக 40 நிமிடங்கள் வரையில் தாமதமாகியிருந்தது. போட்டியின் நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் விராட் கோஹ்லி, முதலில் இலங்கை அணியைத் துடுப்பெத்தாடுமாறு பணித்திருந்தார்.

இந்தியாவுடனான டெஸ்ட் தொடரிலும் ஒரு நாள் தொடரிலும் முழுமையாக வெள்ளையடிக் கப்பட்டிருந்த இலங்கை, இந்தியாவின் சுற்றுப்பயணத்தில் முதல் வெற்றியைத் தேடி ரி-20 போட்டியில் களமிறங்கியிருந்தது. அத்தோடு இலங்கை அணி சார்பாக இப்போட்டியின் மூலம் ரி-20 போட்டிகளில் முதல் தடவையாக விளையாடும் வாய்ப்பை சகலதுறை வீரர் அஷான் பிரியன்ஜன் பெற்றிருந்தார்.

தொடர்ந்து நாணய சுழற்சி முடிவுகளுக்கு அமைவாக இலங்கை அணியின் துடுப்பாட்டத்தை அணித்தலைவர் உப்புல் தரங்க மற்றும் நிரோஷன் திக்வெல்ல தொடங்கியிருந்தனர். ஒரு மெதுவான ஆரம்பத்தை இலங்கை காட்டியிருப்பினும் ஜஸ்பிரிட் பும்ரா வீசிய போட்டியின் இரண்டாவது ஓவரில் தொடர்ந்து மூன்று பவுண்டரிகளை விளாசிய திக்வெல்ல போட்டியை விறுவிறுப்பாக மாற்றினார்.

இவ்வாறனதொரு நிலையில், தமது முதல் விக்கெட்டாக அணித் தலைவர் உப்புல் தரங்கவை பறிகொடுத்த இலங்கை அணி சற்று பதற்றத்தை எதிர்கொண்டது. புவ்னேஸ்வர் குமாரால் போல்ட் செய்யப்பட்ட தரங்க வெறும் 5 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

பின்னர் மைதானம் நுழைந்த தில்ஷான் முனவீர இந்திய பந்து வீச்சாளர்களுக்கு நெருக்கடி தந்து அதிரடி காட்டத் தொடங்கினார். இதனால் இலங்கை அணியின் ஓட்டஎண்ணிக்கைவிரைவாக உயரத் தொடங்கியது. இலங்கை அணியின் இரண்டாம் விக்கெட்டாக வெளியேறிய திக்வெல்ல நல்ல ஆரம்பத்தைப் பெற்றுத்தந்தும் அதனை நீண்ட இன்னிங்ஸாக மாற்றத் தவறி 17 ஓட்டங்களுடன் ஓய்வறை திரும்பினார்.

திக்வெல்லவை அடுத்து துடுப்பாட வந்த வீரர்களில் அஞ்செலோ மெத்திவ்ஸ் ஏமாற்றம் அளித்திருந்தார். எனினும் களம் வந்த இன்றைய அறிமுக வீரர் அஷான் பிரியன்ஜன் உடன் ஜோடி சேர்ந்த தில்ஷான் முனவீர தனது கன்னி அரைச் சதத்தைக் கடந்து அணியை வலுப்படுத்தியிருந்தார்.

போட்டியின் 12 ஆவது ஓவரில் குல்தீப் யாதவின் சுழலினால் மடக்கப்பட்ட முனவீர வெறும் 29 பந்துகளை எதிர்கொண்டு 4 சிக்ஸர்கள் மற்றும் 5 பவுண்டரிகள் அடங்கலாக 53 ஓட்டங்களை விளாசியிருந்தார்.

அடுத்து வந்த வீரர்களில் திசர பெரேரா, தசுன் சானக்க மற்றும் சீக்குகே பிரசன்ன ஆகியோர் சரியான முறையில் பிரகாசிக்கத் தவறினர். இதனால் ஒரு கட்டத்தில் 134 ஓட்டங்களுக்கு இலங்கை 7 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இந்த இக்கட்டான தருணத்தில் அஷான் பிரியன்ஜன் மற்றும் இசுரு உதான ஆகியோர் சாதுர்யமான முறையில் ஆடி அணிக்கு ஓட்டங்கள் சேர்க்க 20 ஓவர்கள் நிறைவில் மேலதிக விக்கெட் இழப்புகள் ஏதுமின்றி இலங்கை 170 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இறுதிவரை ஆட்டமிழக்காமல் பொறுப்புடன் துடுப்பாடிய அஷான் பிரியன்ஜன் மொத்தமாக 40 ஓட்டங்களையும், அதிரடி காட்டிய இசுரு உதான 10 பந்துகளில் 19 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

இந்திய அணி சார்பாக பந்து வீச்சில், யுஸ்வேந்திர சாஹல் 43 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், குல்தீப் யாதவ் 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் சாய்த்திருந்தனர்.

இலங்கையினால் நிர்ணயிக்கப்பட்ட சற்று சவலான வெற்றி இலக்கான 171 ஓட்டங்களை 20 ஓவர்களில் பெறுவதற்கு பதிலுக்கு துடுப்பாடிய இந்திய அணி, ஆரம்பத்தில் இரண்டு விக்கெட்டுகளை பறிகொடுத்து ஒரு தடுமாற்றத்தினை எதிர்கொண்டிருப்பினும் மூன்றாம் விக்கெட்டுக்காக கைகோர்த்த இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லி, மனீஷ் பாண்டே உடன் சேர்ந்து 119 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்தனர்.


இதனால், 19.2 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 174 ஓட்டங்களைப் பெற்று இந்திய அணி வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் இந்திய அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்ற கோஹ்லி மொத்தமாக 54 பந்துகளில் 7 பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் அடங்கலாக 82 ஓட்டங்களைப் பெற்று தனது 17ஆவது ரி-20 அரைச் சதத்தினை பதிவு செய்திருந்தார். மறுமுனையில் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்த மனீஷ் பாண்டே 36 பந்துகளில் 51 ஓட்டங்களைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணியின் பந்து வீச்சில், லசித் மாலிங்க, சீக்குகே பிரசன்ன மற்றும் இசுரு உதான ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் கைப்பற்றியிருந்தனர்.

இந்திய அணியின் இந்த சுற்றுப்பயணத்தை முடித்திருக்கும் இலங்கை, அடுத்து இம்மாத இறுதியில் பாகிஸ்தனோடு டெஸ்ட் தொடரில் மோதுவதற்காக ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு பயணிக்க இருக்கின்றமை குறிப்படத்தக்கது.

# விராட் கோஹ்லியிடம் பாடம் கற்கவேண்டும்: போத்தாஸ் பேட்டி






இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராட் கோஹ்லியிடம் இருந்து இலங்கை வீரர்கள் நிறைய கற்றுக்கொள்ள வேண்டும் எனஇலங்கை அணியின் தற்காலிக பயிற்சியாளர்நிக்போத்தஸ் பேட்டி அளித்துள் ளார்.

இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் போட்டிகள், 5 ஒரு நாள் போட்டிகள் மற்றும் ஒரு ரி-20 கிரிக்கெட் போட்டியில் விளையாடியது. இதில், டெஸ்ட் தொடர் மற்றும் ஒருநாள் போட்டித் தொடரை முழுமையாக வென்றது.

இதற்கிடையே, நேற்று முன்தினம் நடந்த ரி-20 கிரிக்கெட் போட்டியிலும் இலங்கை அணியை வீழ்த்தி இந்தியா வெற்றி பெற்றது. இதன் மூலம் இலங்கையில் நடந்த அனைத்து வகையான போட்டிகளிலும் இந்தியா முழுமையாக வெற்றி பெற்றது.

இலங்கை அணியின் தற்காலிக பயிற்சியாளர் நிக் போத்தாஸ் ரி-20 போட்டிக்குப் பிறகு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்-

இலங்கை அணியை விட இந்திய அணி அனைத்து துறையிலும் சிறந்து விளங்கி வருகின்றது. இந்திய அணியின் தலைவர் விராட் கோஹ்லியிடம் இருந்து எங்கள் வீரர்கள் நிறையக் கற்றுக் கொள்ள வேண்டும்.

விக்கெட்டுகளுக்கு இடையில் விராட் கோஹ்லி ஓடுகின்றமையை கண்டு பிரமிப்பு அடைந்துள்ளேன். களத்தில் நிற்கும் சக வீரர்களுக்கு உரிய நேரத்தில் தகுந்த ஆலோசனைகளை வழங்கி வருகிறார். அவர் எங்களுக்கு சிறந்த முன்மாதிரியாக விளங்கி வருகிறார்.

இந்திய அணியின் சிறப்பான வெற்றிக்கு விராட் கோஹ்லியின் பங்களிப்பே காரணமாகும். இந்திய அணியினரின்கூட்டுமுயற்சியாலும் இந்த வெற்றி அவர்களுக்குச் சாத்தியமாகி உள்ளது. நாங்கள் செய்த தவறுகளில் இருந்து தகுந்த பாடம் கற்றுக் கொள்ளவேண்டியநிலையில் இருக்கின்றோம்.

இலங்கை அணியில் மிக நல்ல முறையில் ஆடக்கூடிய பல வீரர்கள் உள்ளனர். ஆனால் அவர்களிடம் இருக்கும் தன்னம்பிக்கை வெளிப்படும் போது தான் அவர்கள் உலகத் தரம் வாய்ந்த வீரர்களாக மாறும் பெறுவார்கள் என்று தெரிவித்துள்ளார்.

## வீராங்கனைக்கு வந்த சாதனை

அமெரிக்கஓபன்டென்னிஸ் தொடரின் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில், முதல் தர வீராங்கனையான கரோலினா பிளிஸ்கோவா, அதிர்ச்சி தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறியுள்ளார்.

நேற்று முன்தினம் (புதன்கிழமை) நடைபெற்ற காலிறுதி போட்டியில், முதல் தர வீராங்கனையான செக்குடியரசின் கரோலினாபிளிஸ்கோவா, தரவரிசையில் 20 ஆவது இடத்தில்இருக்கும்அமெரிக்காவின்கோகோவான்ட் வெக்வைஎதிர்கொண்டார்.

இப்போட்டியில்பிளிஸ்கோவா எளிதாக வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட போதும் வான்ட்வெக் 7:6 (7:4), 6:3 என்ற நேர்செட் கணக்கில் பிளிஸ்கோவாவை வீழ்த்தி முதல் முறையாக அமெரிக்க ஓபன் அரை யிறுதிக்குத் தகுதி பெற்றார்.

# யாழ்.பல்கலை.ஊழியர்கள் இன்று பணிப் பகிஷ்கரிப்பு

யாழ்.பல்கலைக் கழக ஊழியர்கள் இன்று காலை 10 மணி முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடப்போகிறார்கள் என அறிவித்துள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக பெண் ஊழியர் ஒருவருடன் இரு நிர்வாக அதிகாரிகள் தகாத முறையில் நடந்து கொண்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் பல்கலைக் கழக நிர்வாகத்திற்கு அறிவித்திருந்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படாமையை ஆட்சேபித்தும், தகாத முறையில் நடந்த செயலைக் கண்டித்தும் இன்று காலை 10 மணி முதல் பணிபகிஷ்கரிப்பில் ஈடுபடப் போவதாக பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிவித்தள்ளது.

சங்கத்தின் சகல உறுப்பினர்களும் அந்நேரம் தத்தமது பணியிடங்களில் இருந்து வெளியேறி இராமநாதன் மண்டப முன்றிலில் ஒன்று கூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## குளப்பிட்டிச் சூட்டுச் சம்பவம்:

# மறியலில் உள்ள பொலிஸாரின் பிணை மனுக்கள் ஒத்திவைப்பு

கொக்குவில் குளப்பிட்டிச் சந்திப் பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பொலிஸாரின் பிணைமனுவை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் ஒத்திவைத்தது.

இந்தப் பொலிஸார் சார்பில் அவர்களின் உறவினர்களால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

மாணவர்கள் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். இந்நிலையில் இது தொடர்பான அறிக்கையொன்றைப் பெற வேண்டியுள்ளதாக அரச தரப்புச் சட்டத்தரணி மன்றில் விண்ணப்பம் செய்தார்.

அவரது விண்ணப்பத்தை நீதிபதி ஏற்றுக்கொண்டமையுடன் பிணை மனு தொடர்பான விசாரணையை எதிர்வரும் 14 ஆம் திகதிக்குத் தவணையிட்டார்.

## முடிவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதே முடிவு என்றார் அவர்.

இருபதாவது திருத்தத்தை அங்கீகரிப்பதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்காக அவையின் விசேட கூட்டம் நேற்று நடைபெற்றது.

ஏற்கனவே முன்னைய கூட்டத்தில் இந்தத் திருத்தத்துக்கும் கடும் எதிர்ப்பு வெளியிட்ட நிலையில் நேற்றும் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட பலரும் கடும் எதிர்ப்பைத் தொடர்ந்தும் வெளியிட்டனர்.

"எனினும் இந்தச் சபைக்கு நாடாளுமன்றத்தினால் ஏற்கனவே அனுப்பப்பட்ட இருபதாவது திருத்தச் சட்ட மூலத்தின் வடிவத்தில் இப்போது அந்தச் சட்ட மூலம் இல்லை; அதற்குப் பல மாற்றங்கள் செய்யப்பட்டு விட்டன என நாம் அறிகின்றோம்."

"எனவே அந்த மாற்றங்கள் இந்தச் சபைக்குக் கிடைக்கும் வரை இந்த விடயம் குறித்து நாம் ஒரு முடிவும் எடுக்கத் தேவையில்லை." - என அவைத் தலைவர் அறிவித்திருந்தார்.

"இந்தச் சட்ட மூலம் சம்பந்தமான விடயத்தில் நாம் இரண்டு முடிவுகளில் ஒன்றை மட்டுமே எடுக்க முடியும். ஒன்றில் ஏற்கிறோம் அல்லது மறுத்து நிராகரிக்கிறோம் என்று கூறுவதை மட்டுமே நாம் செய்ய முடியும்." - என்றார் எதிர்க்கட்சித் தலைவர் எஸ். தவராசா.

"முடிவு எடுக்கவில்லை என்ற முடிவையும் நாம் எடுக்கலாம்." - என்று குறிப்பிட்டார் அவைத் தலைவர்.

இத்தகைய விவாதத்தின் மத்தியில் இவ்விடயம் சபையில் முடிவுறுத்தப்பட்டது.

அச்சமயம், அவைத் தலைவர், முதலமைச்சர், எதிர்க் கட்சித் தலைவர் ஆகியோர் ஆங்கிலத்தில் உரையாடி விடயத்தை முடித்து வைத்தனர்.

அதன் பின்னரே -

இவ்விடயத்தில் -

'முடிவு இல்லை என்பதே முடிவு' என்று அவைத் தலைவர் சார்பிலும் -

'நிராகரிப்பது என்பதே முடிவு' என முதலமைச்சர் சார்பிலும் அறிவிக்கப்பட்டது. இந்த விடயத்தைஒட்டிமக்கள்மத்தியில்குழப்பம் ஏற்பட்டிருக்கின்றது. (உ)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயார்."

- இத்தகவலை கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் 'காலைக்கதிர்' நாளிதழுக்குத் தெரிவித்தார்.

"இடைக்கால அறிக்கையில் தீர்வுக்கு வழி செய்யும் விடயங்கள் அமைந்த ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

''அதேசமயம் ஒவ்வொரு கட்சியும் தனித்தனியாகத் தத்தமது மேலதிக நிலைப்பாட்டை பின்னிணைப்பாகச் சேர்ப்பதற்காக ஒப்படைத்துள்ளன. கூட்டமைப்பும் தனது நிலைப்பாட்டை அறிக்கையாக ஒப்படைத்துள்ளது. அதுவும் பின்னிணைப்பாக வரும்.

இந்தப்பின்னிணைப்புகளின் கருத்துக்களைவிட்டு விட்டு, பிரதான இடைக்கால அறிக்கையில் கூறப்பட்டுள்ள அம்சங்களின் அடிப்படையில் தீர்வு குறித்துப் பரிசீலிப்பதற்கு பிரதான கட்சிகளான ஐ.தே. கட்சியும், சு.கவும் இணங்குமானால், அந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் தீர்வுக்கு முயற்சிப்பது குறித்துப் பரிசீலிப்பதற்கு நாங்களும் தயார்."

- என்றார் சுமந்திரன் எம்.பி. (உ)

## பளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று நேற்று முன்தினம் கண்டு பிடிக்கப்பட்டது. இதையடுத்து நேற்றுக் காலை பொலிஸாரால் இந்திராபுரம் பகுதியில் இருந்து சுமார் இரண்டு கிலோமீற்றர் சுற்றளவில் உள்ள 550 குடும்பங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டன.

பின்னர் நேற்று மாலை இந்திராபுரம் பகுதிக்கு வருகை தந்த விமானப் படையினர் குறித்த கிபிர் குண்டை சுமார் பத்து அடிக் குழி ஒன்றினைத் தோண்டி அதனுள் வீழ்த்தியே வெடிக்க வைத்துச் செயலிழக்கச் செய்தனர்.

ஏ - 9 வீதியின் போக்குவரத்து முகமாலைப் பகுதியிலும் பளைப் பகுதியிலும் நிறுத்தப்பட்டது. பாரிய சத்தத்துடனும் அதிர்வுடனும் குண்டு வெடித்ததாக அயலில் உள்ள கிராம மக்கள் தெரிவித்தனர்.

## அதி கூடிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நேற்றுக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

அப்போதே இடைக்கால அறிக்கைக்கு இணைப்பாகச் சேர்ப்பதற்கு கூட்டமைப்பு சார்பில் தாம் வழங்கிய அறிக்கையின் விவரங்களை, வழிகாட்டல் குழுவில் இடம்பெற்றிருக்கும் கூட்டமைப்புப் பிரதிநிதிகளான சம்பந்தரும், சுமந்திரனும் வெளிப்படுத்தினர்.

அதிலேயே இணைந்த வடக்கு - கிழக்குத் தாயகத்தில் சமஷ்டி அடிப்படையில் அதி கூடிய அதிகாரப் பகிர்வுடனான ஒரு தீர்வு குறித்துக் கூறப்பட்டி ருந்தது.

அந்த அறிக்கையில் உள்ள பிரதான அம்சங்கள் குறித்து நேற்றைய நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

★ மாகாண ஆளுநருக்குரிய அதீத அதிகாரங்கள் இல்லாமல் ஆக்கப்படவேண்டும்.

★ மாகாணங்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் குறைக்கப்படாமலும், திருப்பி எடுக்கப்படாமலும், நாடாளுமன்றத்தினால் பிரயோகிக்கப்படாமலும் இருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

★ இதற்காக இரண்டாவது சபை ஒன்று நிறுவப்பட வேண்டும். அந்தச் சபைக்கு மாகாணங்கள் சார்பாகப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவேண்டும்.

★ அரசமைப்பு விவகாரங்கள், சர்ச்சைகள், பொருள் கோடல் போன்றவற்றில் முடிவுகளை எடுப்பதற்காக அரசமைப்பு நீதிமன்றம் ஒன்று உருவாக்கப்படவேண்டும்.

- இது போன்ற விடயங்கள் அந்த அறிக்கையில் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

எனினும், வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை உத்தியோகபூர்வமாக வெளியாவதற்கு முன்னர் அதனுடன் இணையாக இடம்பெறும் இந்த அறிக்கையும் வெளியாகக் கூடாது என்பதால் அதன் பிரதிகளை சம்பந்தன் தமது கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க மறுத்துவிட்டார்.

அதில் இடம்பெற்றிருந்த பிரதான அம்சங்களை மட்டும் அவர் தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளங்கப்படுத்தினார். மேலதிக விளக்கங்களை சுமந்திரன் வழங்கினார்.

இந்த நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் மாவை சேனாதிராசா, சிவசக்தி ஆனந்தன், சித்தார்த்தன், வியாழேந்திரன் ஆகியோர் பங்குபற்றினர். (உ)

## நிராகரித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரிசீலிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

20ஆவது திருத்தம் சபையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்வின் போது 20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் விவாதிக்கப்பட்டு அத் திருத்தத்திற்கு கடுமையான எதிர்ப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்த நிலையில், இத்திருத்தத்தை ஆதரிப்பதா, இல்லையா என்பது தொடர்பில் நேற்றைய அமர்வில் முடிவெடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே இந்த விடயம் நேற்று சபையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது 20 ஆம் திருத்தம் தொடர்பில் கடந்த அமர்வில் விவாதிக்கப்பட்டு அது தொடர்பில் ஆளுநருக்கு கடிதம் அனுப்பியமை மற்றும் அதன் பின்னர் ஆளுநர் அவைத்தலைவருக்கு கடிதம் அனுப்பியமை ஆகியன குறித்த விடயங்களும் இதன் போது பேசப்பட் டன.

இதன் பின்னர் இத்திருத்தத்தை மாகாண சபையில் நிராகரிப்பது எனவும் இத்திருத்தத்தில் அரசாங்கம் கூறுவது போன்று புதிய மாற்றங்கள் ஏதும் வருமிடத்து அதனை அப்போது பரிசீலிக்கலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## பொலிஸார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருந்த குற்றப் புலனாய்வுப் பிரிவின் அலுவலகத்தில் நேற்று முன்னிலையாகி வாக்குமூலமளித்துள்ளார்.

பிணைமுறி மோசடி தொடர்பான விசாரணையில் இவருக்கும், இவரது நிறுவனத்துக்கும் எதிராகக் குற்றச்சாட்டுக்கள் பெருகி வருகின்றமை தெரிந் ததே.

இந்தப் பிணைமுறிப் பிரச்சினை ஏற்பட்ட சமயம் இவரின் மாமனார் அர்ஜுன் மகேந்திரனே மத்திய வங்கி ஆளுநராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## லலித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவின் முன்னாள் தலைவர் அனுஷ பல்பிட்ட ஆகியோருக்கு கொழும்பு மேல்நீதிமன்றம் 3 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின்போது, தொலைத் தொடர்புஒழுங்கமைப்புஆணைக் குழுவுக்குச் சொந்தமான, அறுபது கோடி ரூபாவைத் தவறான முறையில் கையாண்டு, தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பயன் படுத்தினர் எனச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டமையை அடுத்தே, இவர்களுக்கு இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

லலித் வீரதுங்கவும், அனுஷ பல்பிட்டவும் குற்றவாளிகளாக காணப்பட்டமையை அடுத்து, 3 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையுடன், தலா இருபது லட்சம் ரூபா அபராதத்தையும் நீதிமன்றம் விதித்துள்ளது,

அத்துடன் இரண்டு பேரும் தலா ஐந்து கோடி ரூபாவை, தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவுக்கு இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும் கொழும்பு மேல்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இறுதிக் கட்டப் போரின் போது இராணுவ நடவடிக்கைகளுக்கு ஏற்படும் தடைகளை அகற்றுவதற்காக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் மூவரணிகள் அமைக்கப்பட்டிருந்தன.

அதில் பஸில் ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருடன் அப்போது ஜனாதிபதியின் செயலாக இருந்த லலித் வீரதுங்கவும் ஒரு உறுப்பினராக இடம்பெற்றிருந்தார்.

இந்தியத் தரப்பில் வெளியுறவுச் செயலாளர் சிவ்சங்கர் மேனன், தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் மற்றும் விஜய்சிங் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## கிருஷாந்திக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றும் அவருடன் கொல்லப்பட்ட அவரது தயார், அவரது சகோதரர் மற்றும் அயலவர் ஆகியோரை நினைவு கூரும் நிகழ்வில் அவர் பங்கு பற்றினார். அந்த நிகழ்வை ஒட்டித் தாம் விடுத்த செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு :-

மாணவி கிருஷாந்தி குமாரசாமி தமது 21ஆவது பிறந்த நாள் வரை வாழவில்லை; வாழவிடவில்லை என்பதுதான் பொருத்தம். ஆனால், அவரின் 21ஆவது இறந்த வருட நினைவு தினத்தையாவது நாம் அனைவரும் அவர் இறந்த அதே இடத்தில் கூடி நின்று கனத்த மனங்களுடன் நினைவு கூருகின்றோம். அவரின் இறப்பு இயற்கை மரணம் அன்று. அறுவர் அடங்கிய ஓர் இராணுவ மிலேச்ச கூட்டம் அப்பெண்ணை பலாத்காரத்திற்கு உட்படுத்தியது மட்டுமன்றிக் கொன்றும் புதைத்துவிட்டது. யுத்தத்தின் போது எமது பொது மக்களுக்கு நேர்ந்த கதிக்கு இது ஓர் எடுத்துக்காட்டு. வெளிவராமல் எத்தனையோ பலாத்காரங்களும் கொலைகளும் நடந்தேறின. இராணுவத்தினர் கையில் நடைபெற்ற குற்றச்செயல்களுக்கு ஓர் அடையாளமாக கிருஷாந்தியின் பலாத்காரமும் கொலையும் அமைந்தன.

அவரின் ஞாபகார்த்தமாக வடமாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து 21 மாணவியர்க்கு துவிச்சக்கர வண்டிகளை வழங்கியும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்குப் புத்தகப் பைகளை வழங்கியும் இத்துக்க நிகழ்வை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

இச்செம்மணி வெளி அக்காலத்தில் ஒரு திறந்த மனிதக் கொல்களமாக மாற்றப்பட்டிருந்தது. இப்பாதையால் பயணிக்கின்றவர்கள் அடுத்த எல்லையைத் தாண்டும்வரை அவர்களின் உயிர் அவர்கள் வசம் இருந்து விட்டால் அவர்கள் புண்ணியம் செய்தவர்களாகக் கருதப்பட்டார்கள். வேலியே பயிரை மேய்வது போல் பாதுகாப்புப் போர்வை அணிந்தவர்களே பாரதூரமான குற்றச் செயலில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நாட்டில் இது போன்ற அவலங்கள் இனிமேலும் நடவாதிருக்க வேண்டும் என்ற காரணத்தினாலேயே சமஷ்டி முறையிலான சுயாட்சி அதிகாரங்களை வேண்டி நாம் அர சுடன் மோதிக் கொண்டிருக்கின்றோம். பிழைகள் விசாரிக்கப்படலாம். தண்டனைகள் வழங்கப்படலாம். ஆனால், பிரிந்த உயிரை மீண்டும் திருப்பித் தரக் கூடிய வல்லமை எவருக்கு உண்டு?

கிருஷாந்தியினதும் அவரின் தாயார், சகோதரன் பிரணவன் ஆகியோரினதும் அவர்தம் அயலவர் கிருபாகரனதும் மறைவு எம் மக்களால் இன்றைய நாள் நினைவு கூரப்பாலது. வருடா வருடம் நினைவு கூரப்பாலது. எமது மக்களின் கடந்த கால சோக வாழ்க்கையின் அடையாளம் இவர்கள் மறைவு. அவர்கள் அனைவரதும் உற்றார் உறவினர்களுக்கு இச் சந்தர்ப்பத்தில் எமது ஆழ்ந்த துக்கங்களையும் அனுதாபங்களையும் தெரிவிப்பதை விட எம்மால் என்ன செய்ய முடியும்? இவ்வாறான மிலேச்சச் செயல்கள் எம்மிடையே இனியும் ஏற்படாதிருக்க இறைவன் வழி வகுப்பானாக!

- என்றார். (உ)

## சாரதிகளுக்குத் தெரிந்த மொழியைக் கையாளுங்கள்:

# இலங்கை மனித உரிமை ஆணைக் குழு போக்குவரத்து பொலிஸ் அதிகாரிக்குக் கடிதம்

கொழும்பு, செப். 08

போக்குவரத்து விதியை மீறிய சாரதி ஒருவருக்குத் தண்டப்பணம் அறவிடுதல் மற்றும் தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் போது போக்குவரத்து பொலிஸார் அந்தச் சாரதிக்குத் தெரிந்த மொழியிலேயே அதனை வழங்க வேண்டும்.

மேலும், மொழி உரிமையை மீற முடியாது என்றும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய இணைப்பாளர் ஆர்.எல். வசந்த ராஜா வலியுறுத்தியுள்ளார்.

வவுனியா போக்குவரத்து பொலிஸாரின் செயற்பாடு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடொன்று தொடர்பில் வவுனியா - போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

போக்குவரத்து பொலிஸாரால் தனக்குப் புரியாத சிங்கள மொழியில் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டமையை ஆட்சேபித்தும், தனது மொழி உரிமை மீறப்பட்டதாகத் தெரிவித்தும் வவுனியா, மன்னார் வீதியைச் சேர்ந்த பிரசன்னா என்ற இளைஞன் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

கடந்த ஜனவரி மாதம் 19 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு குறித்து மனித உரிமை ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையை அடுத்து, வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரிக்குக் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

முறைப்பாட்டாளரால் கடந்த ஜனவரி மாதம் 19 ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய காரியாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, கடந்த யூன் மாதம் 27 ஆம் திகதி மனித உரிமை அலுவலக காரியாலயத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இந்த விசாரணைக்கு அமையத் தங்களது பிரிவின் கீழ் பணியாற்றும் உத்தியோகத்தரால் முறைப்பாட்டாளருக்கு கடந்த ஜனவரி மாதம் 10 ஆம் திகதி வழங்கப்பட்ட 561428 இலக்க போக்குவரத்து குற்றத்திற்காக வழங்கப்படும் தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரத்தில் சிங்கள மொழியால் விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும் முறைப்பாட்டாளருக்கு சிங்கள மொழி தெரியாத காரணத்தால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பற்றி அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதை ஆணைக்குழு அவதானிக்கின்றது.

தமிழ் மொழி தெரிந்த பொது மகனிற்கு சிங்கள மொழியில் தண்டப் பணச் சீட்டையோ அல்லது சிங்கள மொழியிலான தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரத்தை வழங்குவதோ பிழையான நடைமுறை என்பதுடன் இச்செயற்பாடு பொதுமகன் ஒருவரது அடிப்படை உரிமைகளில் ஒன்றாகிய மொழி உரிமையை மீறும் செயலாகும்.

எனவே, எதிர்காலத்தில் அதிகாரிகள் போக்குவரத்துக் குற்றங்களுக்கு வழங்கும் சீட்டுக்களை பொதுமக்களுக்கு வளங்கும் மொழியில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் குறித்த மொழியிலான சேவையை வழங்குவதற்கு அரசதிணைக்களமானது கடப்பாடு கொண்டுள்ளது என்பதையும் இந்த ஆணைக்குழு தெரிவித்துக் கொள்கின்றது.

எனவே, இது தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கை பற்றிய அறிக்கையை அனுப்பிவைக்குமாறும், இந்த 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்படுகின்றது எனவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை வைத்திய சபை கடமையைத் தவறிவிட்டது!

## தனியார் வைத்திய பீடங்களின் பெற்றோர் சங்கம் குற்றச்சாட்டு

இலங்கை வைத்திய சபை தனதுகடமையைநிறைவேற்றத் தவறியமையே சைட்டம் பிரச்சினைக்குக் காரணமாகும்.

அத்துடன், வைத்தியசபை நாட்டில் வைத்தியர்கள் உருவாகின்றமையை தடுப்பதானது நாட்டுக்கு செய்யும் துரோகமாகும் எனத் தனியார் வைத்திய பீடங்களின் பெற்றோர் சங்கம் தெரிவித்தது.

தனியார் வைத்திய பீடங்களின் பெற் றோர் சங்கம் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அதன் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை வைத்தியசபையின் நீதியற்ற செயற்பாடு சைட்டம் பிரச்சினையை அதிகரித்துள்ளது. வைத்தியசபை அரச நிறுவனமாகும். அரசின் கொள்கையை அது பின்பற்ற வேண்டும். கடந்த சில காலமாக வைத்திய சபையின் நட வடிக்கைகள் அரசகொள்கைக்கு மாறானவையாகவே இருந்து வருகின்றன.

அதாவது, நாட்டில் தனியார் கல்வி நிறுவனங்கள் உருவாவதை அரசு அனுமதிக்கின்றது. இதற்கு முன் இருந்த அரசாங்கமும் இதனை அனுமதித்துள்ளது. ஆனால், இலங்கை வைத்திய சபை தனியார் மருத்துவ நிறுவனங் கள் உருவாவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றது.

ஆரம்ப காலத்தில் இவ்வாறு செயற்படவில்லை. அத்துடன் தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்பது மருத்துவசபையின் பொறுப்பல்ல. மருத்துவசபை தனது பொறுப்பை மீறி, வேறு யாருடைய தேவைக்காகச் செயற்பட்டு வருகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

# முள்ளிவாய்க்கால் பகுதியில் தாழ்வாகப் பறந்த போர்விமானம்!



முல்லைத்தீவு, செப். 08

முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன் பகுதியில் நேற்று இலங்கை விமானப் படையினருக்கு சொந்தமான போர் விமானம் ஒன்று மிகத் தாழ்வாகப் பறந்துள்ளது.

இதனால் அப்பகுதியில் பொதுமக்கள் மத்தியில் சற்று பரபரப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் திடீர் எனத் தீப் பற்றியதால் பெரும் பரபரப்பு!

## பொலிஸார் விசாரணை!



கொழும்பு, செப். 08

ஹட்டன் - மஸ்கெலியா - சாமிமலை பிரதான வீதியில் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளொன்று திடீரெனத் தீப்பிடித்து எரிந்துள்ளதால் அங்கு பெரும் பதற்றம் ஏற்றட்டது என மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிள் ஓட்டுனர், மோட்டார் சைக்கிளை விட்டுக் குதித்தமையால் தீக்காயங்கள் இன்றி தப்பியுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 2 இலட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

பிரதேசவாசிகளும் பொலிஸாரும் இணைந்து தீயை அணைத்து மோட்டார் சைக்கிளை மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நாற்பது கோடி ரூபா செலவில் மண்டைக்கல்லாறு பாலம்



கிளிநொச்சி, பூநகரி - மன்னார் வீதியில் மண்டைக் கல்லாறு பாலத்தின் கட்டுமானப் பணிகள் ஜப்பானிய அரசின் ஜெய்கா திட்டத்தின் கீழ் 400 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி, பூநகரி - மன்னார் வீதியின் புனரமைப்புப் பணிகள் நிறைவுறுத்தப்பட்ட போதும், போக்குவரத்துக்கு பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தும் வகையில் மண்டைக் கல்லாறு பாலம் காணப்பட்டது.

இந்த நிலையில், குறித்த பாலத்தின் கட்டுமானப் பணிகள் கடந்த 2016ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிலையில், பாலத்தின் கட்டுமானப் பணிகள் பணிகள் 21 மாதங்களில் நிறைவுபெறும் எனகிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

தேவேளை, கிளிநொச்சி, முரசுமோட்டை - வட்டக்கச்சி வீதியில் சேதமடைந்த நிலையில் காணப் பட்ட இரு பாலங்களின் புனர மைப்புப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

கிளிநொச்சி, முரசுமோட்டை - வட்டக்கச்சி பிரதான வீதியாகக் காணப்படும் பழைய கண்டி வீதியில் உள்ள இரு பாலங்கள் மிகவும் மோசமாகச் சேதமடைந்த நிலையில் காணப்பட்டன.

இதனால், இந்தப் பாலத்தின் ஊடாகப் பயணிக்கும் விவசாயிகள், பொதுமக்கள் மழை காலங்களிலும் ஏனைய காலங்களிலும் பெரும் சிரமங்களை அனுபவித்து வந்தனர்.

இந்த நிலையில், இந்தப் பாலங்களைப் புனரமைத்து தருமாறும் பல்வேறு தரப்புக் களும் கோரிக்கை விடுத்திருந்தன.

இதனையடுத்து சேதமடைந்த பாலங்களை புனரமைக்கும் திட்டத்தின் கீழ் இந்த இரு பாலங்களும் புனரமைக்கப்பட்டு அதன் புனரமைப்புப் பணிகள் நிறைவு செய்யப் பட்டுள்ளன.

இந்த நிலையில், இந்த இரண்டு பாலங்களையும் மிக விரைவில் மக்களிடம் கையளிக்க எதிர்பார்த்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir



# விடுதலை கல்வியில்தான்; ஆளுநர் குரே கூறுகின்றார்







யாழ்ப்பாணம், செப். 08

“பெற்றோர், மாணவர்களிடம் நான் ஒன்றைக் கூற விரும்புகின்றேன். உங்கள் அனைவரினதும் விடுதலை கல்வியிலேயே தங்கியிருக்கின்றது.”

– இவ்வாறு கூறியிருக்கின்றார் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சிவசுப்பிரமணியத்தின்திருவுருவச் சிலையை ஆளுநர் குரே நேற்றுத் திறந்து வைத்தார்.

பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினரால் நிர்மாணிக்கப் பட்ட இந்தச் சிலையைத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் விக்னேஸ்வரன், செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்கத்தின் பிரதிநிதிகள், அமரர் சிவசுப்பிரமணியத்தின் குடும்பத்தினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.





இங்கு உரையாற்றிய ஆளுநர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

இலங்கை வரலாற்றில் கல்வியில் முன்னிலையில் இருந்த வடக்கு மாகாணம் இன்று பின்னோக்கி நிற்பதற்கான காரணங்களை நாம் அனைவரும் ஒன்றாகத் தேடிப்பார்க்க வேண்டும்.

வெளிச்சம் இன்றி, கட்டடங்கள் இன்றி, நல்ல ஏனைய வசதிகள் இன்றி, நல்ல பெறுபேறுகளைப் பெற்றுகல்வியில்உயர்ந்து, உயர் பதவிகளில் இடம் பிடித்ததமிழ்மக்கள் இன்று கல்வியில்பின்தள்ளப்பட்டிருக்கின்றார்கள். மாணவர்கள் இடத்திலும், பெற்றோர்கள் இடத்திலும் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகின்றேன். உங்கள் அனைவரினதும் விடுதலை கல்வியிலேயே தங்கியிருக்கின்றது. கல்வியில் உயர்வடைந்தால் மட்டுமே பல சாதனைகளை நிறைவேற்ற முடியும்.

வெள்ளைக்காரர்கள் எமது நாட்டை ஆண்ட போதும் வடக்கு மாகாணத்திற்கு அபிவிருத்தி எதனையும் பெரிதாகச் செய்து விடவில்லை. மலையகப் பகுதிகளிலும் தெற்கிலும் பல அபிவிருத்திகளை அவர்கள் செய்தார்கள். வீதிகளை அமைத்தார்கள்; தொழிற்சாலைகளை உருவாக்கினார்கள்; தேயிலை, இறப்பர் தோட்டங்களை உருவாக்கினார்கள். ஆனால் இங்கு எதனையும் செய்யவில்லை.

அதேபோன்று தற்போது இங்கு இருபவர்கள் எதனையும்செய்யவில்லை. திக்கம் வடிசாலைகளை மீள உருவாக்கவில்லை; சிமெந்துத் தொழிற்சாலையை மீள ஆரம்பிக்கவில்லை; பால் தொழிற்சாலைகள் மற்றும் எத்தனையோ தொழிற்சாலைகளை மீள உருவாக்கவில்லை. அவற்றை உருவாக்கி இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கவும் இல்லை.

சிவசுப்பிரமணியம் இந்த பாடசாலைக்கு, இந்த மாணவர்களின் கல்விக்குத்தனதுமுழுசக்தியையும் வழங்கியிருக்கின்றார். அவரைப் போன்ற ஆசிரியர்கள் அந்தக் காலத்தில் இருந்ததன் காரணமாகத் தான் வடக்கு மாகாணத் தமிழ் மக்கள் கல்வியில் உயர்வடைந்தார்கள். அவரைப் போல் தற்போது இருக்கின்றஆசிரியர்களும் செயற்படவேண்டும் எனஇச் சந்தர்ப்பத்தில் கோரிக்கை விடுக்கின்றேன். – எனத் தெரிவித்தார்.











யாழ். செம்மணியில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட மாணவி கிருஷாந்தியின் 21ஆவது நினைவு தினம் நேற்று செம்மணியில் அனுஷ்டிக்கப்பட்டது அந்த நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

# அரசுப் பக்கம் பாய்வார் கெஹலிய?

கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவிக்க தீர்மானித்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசாங்கத்தின் மூத்த அமைச்சர்கள் சிலர் இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெலவுடன் கலந்துரையாடியுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

கெஹலிய ரம்புக்வெலவுடன் கூட்டு எதிர்க்கட்சி யின் மேலும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் அர சாங்கத்துக்கு ஆதரவு தெரிவிக்கத் தீர்மானித்துள்ளார் எனவும் தெரியவருகிறது.

இந்நிலையில், தமது கூட்டு எதிரணியில் அரசாங்கத்தில் விரைவில் தாம் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்கவுள்ளார் என சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

அரசாங்கத்துடன் இணைந்துகொள்ளுமாறு அரசாங்கத்தின் அமைச்சர்கள் சிலர் தம்முடன் கலந்துரையாடினர் எனவும், அவ்வாறு கலந்துரையாடிய சிலர் அரசுடன் இணையும் கூட்டணியில் தன்னையும் இணைத்துக் கணக்குப் பார்ப்பது தொடர்பில் தன்னால் எதுவும் கூறமுடியாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

2004 இல் ஐ.தே. கட்சியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட கெஹலிய ரம்புக்வெல, 2005 இல் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் அவரது அரசுப் பக்கம் தாவி அமைச்சரானார் என்பது தெரிந்ததே.

# முந்தல் லொறி விபத்தில் யாழ். சாரதி உயிரிழப்பு



புத்தளம் – மதுரங்குளிப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றவாகன விபத்தில், ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன், மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற லொறி ஒன்று பாதையை விட்டு விலகி, மதில் ஒன்றுடன் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்து ஏற்பட்டு சுமார் ஒரு மணித்தியாலத்திற்கு பின்னரே லொறியின் சாரதி மீட்கப்பட்டார் எனவும் சிகிச்சைகளுக்காக அவர் புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் எனவும் கூறப்படுகின்றது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எட்வின் ராஜ்குமார் (வயது – 38) எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முந்தல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.09.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.